ISSN 1391-958X

# சொல்



சொல் ▪ மூன்றாம் காலாண்டு ▪ 2006

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

சொல் ■ மூன்றாம் காலாண்டு ■ 2006

*ISSN 1391-958X*


**அட்டைப்படம் பற்றிய வர்ணனையும் சுருக்கமான பதிவும் :**

*A9 பாதை மூடப்பட்ட போது தமது வீடுகளுக்குச் செல்வதற்காக காத்திருப்போர்.*


**அட்டைப்படம்**

*நன்றி* -Tamilnet

**கௌரவ ஆசிரியை**

சித்ரலேகா மௌனகுரு

**மொழி பெயர்ப்பு**

நிரஞ்ஜலா அருள்நந்தி

எம்.ரீ. ஸெய்னுர் றிஃபா

**சரவை பார்த்தவர்**

குகநிதி குகநேசன்

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**

வேலாயுதம் ஜெயசித்ரா

**சஞ்சிகை வெளியீடு**

பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு

174, அல்விஸ் ஒழுங்கை, காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை

தொலைபேசி 94-11-5632045, 2690201, 5635900

தொலைநகல் : 94-11-2690192, மின்தபால் : womedia@sltnet.lk

options@sltnet.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் சொல்ல விரும்புவது.....

2006 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் சொல்லின் இந்த இதழ் வெளி வருகின்றது. 2006 ஆம் ஆண்டு இலங்கையில் தொடரும் அரசியல் வன்முறைகளுக்குச் சான்று பகர்வது மாத்திரமல்ல, சமாதான முயற்சிகளின் தளர்வையும் குறிக்கின்றது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் மாத்திரமன்றி நாடு முழுவதும் யுத்தத்தின் விளைவுகள் வெளித் தெரிகின்றன. இம் முறை வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்கான ஒதுக்கீடு 43வீதத்தால் அதிகரிக்கப்பட்டமையானது நாடு இராணுவமயப்படுத்தலுக்குள் நன்கு நகர்ந்து செல்வதற்குச் சான்று பகர்கின்றது. சுனாமிப் பேரலையுடன் இவ் ஆண்டு மே மாதத்தில் இருந்து வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஏற்படும் யுத்தம் காரணமான இடப் பெயர்வுகளும், உயிர் உடமை அழிப்புகளும் சேர்ந்து இனிமேல் இதற்கு முடிவு இல்லையோ என்று மக்கள் எண்ணும் வண்ணம் அவர்களை விரக்தியின் விளிம்புக்குக் கொண்டு போயுள்ளன.

நான்கு வருடங்களாக நீண்ட போர் நிறுத்த ஒப்பந்தமும் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளும் 2006 ஆம் ஆண்டு இறுதியில் கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டன என்பதே மக்களின் அபிப்பிராயம். "சமாதானத்தின் கதவுகள் அகலத் திறந்துள்ளன" என்ற கூற்றுகள் வெறும் வாய்ப் பேச்சுத்தான் என்பதையே சகல நிகழ்வுகளும் காட்டுகின்றன.

இத்தகைய நிலை இலங்கைக்கு மாத்திரம் உரிய ஒரு விசேட அம்சமல்ல. வரலாற்றிலும், சமகாலத்திலும் வெவ்வேறு வகையான உள்நாட்டுப் போர்களிலும், ஆயுத மோதல்களிலும் சிக்கியுள்ள நாடுகளில் இத்தகைய நிலைகள் காணப்பட்டன: காணப்படுகின்றன.

இவற்றுள் சில நாடுகளில் விட்டுக் கொடுப்புகள், சாதுரியமான நடவடிக்கைகள், மக்களின்பங்கேற்பு ஆகியவற்றால் நிலைமைகள் சீராகின. சிலவற்றில் மோசமான நிலைமைகள் இன்னும் தொடர்கின்றன.

எமது நாட்டில் சமாதானத்தையும், சகலருக்குமான நீதியையும், உரிமைகளுக்கான பாதுகாப்பையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்துவதற்கு மக்களின் பரந்த அளவிலான பங்கு பற்றலும் செயற்பாடுகளும் அவசியம்.

சமாதானத்திற்கான மக்களின் செயல்வாதம் இலங்கையில் மிகக் குறைவு.

எனினும் மிகச் சிறிய அளவிலேனும் சமாதானத்துக்காகவும் சமூக நீதிக்காகவும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் குரல்கள் ஒலிக்கின்றன. இவற்றுள் பெண்களின் குரல் இடையறாது கேட்கின்றது. போர் அல்ல: சமாதானம், யுத்தம் அல்ல: வாழ்வு என்ற பெண்களின் பிரகடனம் என்றும் தொடரும்.

2007 ஆம் ஆண்டு யுத்தத்தின் அவலத்துடன்தான் விடியப் போகிறது. அதிலும் பெண்கள் குரல் ஒலிக்கும்.

போர் அல்ல :வாழ்வு வேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் விடுக்கும் அறைகூவல்!

வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே 2006 ஆம் ஆண்டு நிறைவடைகின்றது.

மீண்டும் மோசமடையும் யுத்த நிலவரம் காரணமாக டிசம்பர் மாதத்தில் மாத்திரம் ஏறத்தாழ 20,000 பேர் மோதல்கள் நிலவும் பகுதிகளிலிருந்து கந்தளாய், வாழைச்சேனை போன்ற நகரங்களை நோக்கி நகர்ந்த வண்ணமிருக்கின்றனர். வாகரையிலிருந்து வருகைதந்த பெருமளவானோரும் 2006 ஆகஸ்ட் மாதத்திலிருந்தே இடம்பெயர்ந்த மக்களாவர்.

சமாதானம் பற்றிய தொடுவானில் முன் அறிகுறிகள் பற்றையும் அவதானிக்க முடியவில்லை. தெற்கின் அரசியல் கட்சிகளிடையே சமாதானப் பேச்சுவார்த்தை குறித்தும், அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது குறித்தும் கடும் பிளவுபட்ட போக்கையே அவதானிக்க முடிகிறது. ஐ.தேக.வுடன் ஜனாதிபதி ஏற்படுத்திக்கொண்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் போக்கை அவதானிக்க முடியவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரான கருத்தியலை உருவாக்குவதற்காக பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ளும் யுத்தத்திற்குச் சார்பானவர்கள் தமிழ் மக்கள் ஓரங்கட்டப்படுவதை நியாயப்படுத்துகின்றனர். அண்மையில் இயற்றப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் காரணமாக இந்த நாட்டின் ஒரு சராசரி தமிழரின் சுதந்திரம் மாத்திரமின்றி சமாதானத்தை விரும்புகின்ற, மனித உரிமைகள் பற்றியும் மனித சுதந்திரம் பற்றியும் பேசுகின்ற பிரஜைகளினதும் சுதந்திரம் பறிபோயுள்ளது.

பொருளாதாரமும் சிக்கலான நிலையை அடைந்துள்ளது. மோதல் நிலை காரணமாக சுற்றுலாக் கைத்தொழில் துறையும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. தேயிலைத் தோட்ட பணிநிறுத்தம் காரணமாக அந்தத் தரப்பிலிருந்து கிடைக்கும் வருவாயும் வீழ்ச்சி கண்டுள்ளது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ரூ.300 வரை அதிகரிப்பதற்குப் பின்னிற்கும் அரசாங்கம், பண வீக்கத்தையும் துரிதமாக அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவையும் பற்றி அறியாதது போல் இருக்கின்றது.

இந்த அனைத்துப் பிரச்சினைகளும் சிறப்பாக பெண்கள் மீது தாக்கம் செலுத்துகின்றன என்பதைப் புதிதாகக் கூற வேண்டியதில்லை. பொதுவாக நோக்குமிடத்து, நாளுக்கு நாள் குன்றிவரும் ஜனநாயகத்திற்கான வாய்ப்புவளம் காரணமாக அவர்களின் நடமாட்டம் வெளிப்பாடுகள் முதலியன மட்டுப்படுத்தப்படுகின்றன. தான்தோன்றித்தனமாக கைது செய்யப்படுதல் முதலியவற்றுக்கு இரையாகக்கூடிய குடும்ப உறுப்பினர்கள் பற்றியும் அவளின் கவனமும் விழிப்புணர்வும் கூர்மையடைய வேண்டியுள்ளது. அடிப்படைத் தேவைகள் போன்றே, மனித உரிமைகளாக ஏற்றுக்கொள்ளப்படும் கல்வி, சுகாதார சேவைகள் முதலியவற்றை உரிய முறையில் பெற்றுக்கொள்வதில்கூட பாரதூரமான பிரச்சினைகள் உருவெடுத்துள்ள ஒரு காலகட்டத்தில், பெண்களுக்கு சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது பொதுவான ஒரு பிரச்சினையாகும். அவ்வாறே, அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு மத்தியில் தமது வீடுகளின் வரவு-செலவை சமநிலைப்படுத்திக்கொள்வது ஒரு பெரும் சவாலாக உள்ளது.


யுத்தம் நிலவும் பிரதேசங்களில் வாழும் சகல இனப் பிரிவுகளையும் சார்ந்த பெண்களும் பாதுகாப்பற்ற ஒரு வாழ்க்கைப் பயணத்தை எதிர்நோக்குகின்றனர். அதில் இடப்பெயர்வுகள், வாழ்விடங்கள் பறிபோதல், வாழ்வாதாரம் அழிதல், உயிர் மற்றும் சொத்துக்களின் அழிவு முதலியன வழமையான வாழ்க்கையாக மாறுகின்றது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட எல்ரீரீஈ யினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களில் பாரிய உணவுப் பற்றாக்குறையும் சுகாதார வசதிகளுக்கான குறைபாடுகளும் நிலவுவதை கடந்த பல மாதங்களில் நாம் அவதானித்தோம். யுத்தம், யுத்தம் சார்ந்த சமூக பிரச்சினையின் விளைவுகளை மிகவும் கொடூரமான முறையில் அனுபவிப்பவர்கள், பெண்களேயாவர். தாம் வன்செயலுக்கும் துன்புறுத்தலுக்கும் இரையாவதுடன் மாத்திரமின்றி, தமது குடும்பத்தையும், சமூகத்தையும் சார்ந்தவர்களும் அவ்வாறே வன்செயலுக்கும் துன்புறுத்தலுக்கும் இரையாவதைக் காண்பதற்கு நேரிடுகின்றது. அரசாங்கமும் எல்ரீரீஈ இயக்கமும், பிற ஆயுதந்தாங்கிய குழுக்களும் தமது யுத்தக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் இந்த நாட்டின் துரதிஷ்டம் காரணமாகவே சமாதானத்திற்குச் சார்பான மக்களின் குரல்கள் ஒடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், நாம் முயற்சியைக் கைவிட வேண்டியதில்லை. பலவீனப்பட வேண்டியதில்லை. முப்பது ஆண்டுகளுக்கு அண்மிய காலமாக இந்த நாட்டை சமாதானப் பாதையை நோக்கியும், சமத்துவத்தை நோக்கியும், மானிட கௌரவத்தை நோக்கியும், மனித நேயத்தை நோக்கியும் இட்டுச் செல்வதற்கு நாம் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகளை நாம் கைவிடோம். எமது பிள்ளைச் செல்வங்களான எதிர்கால சந்ததியினருக்காக நாம் துணிவு பெறுவோம். மௌனத்தைக் கலைப்போம். உலகம் பூராவும் வாழும் பெண்களுடன் வன்செயலுக்கு எதிராக நாம் 16 நாட்கள் பூராகவும் உறுதிமொழி பகர்ந்தவாறே சமாதானம், சமாதானத்திற்குச் சார்பான ஒரு சமூகத்தை நோக்கிய பயணத்தை நாம் கைவிடோம். எம்மைப் போன்ற இந்த உயரிய குறிக்கோள்களுக்காகத் தம்மை அர்ப்பணித்த வேறு பெண்-ஆண் குழுக்கள் இந்த நாட்டில் இருப்பதை நாமறிவோம். அவர்களுடன் கைகோர்த்து கூட்டுச் செயற்பாடுகளில் இறங்குவது 2007 ஆம் ஆண்டின் சவாலாகும்.■

**சுனிலா அபேசேகர**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அடிப்படை மனித உரிமைகளை மீறும்

# பெண்களுக்கெதிரான வன்முறைகள்

பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்செயல்கள், பெண்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுபவையாகும். அத்தகைய வன்செயல்கள் வயது, திருமண நிலை, இனம், மதம், கலாசாரம், வகுப்பு அல்லது வருமான நிலைமைகளைக் கருத்திற்கொள்ளாமல் எந்தவொரு நிலையிலான பெண் மீதும் பாதிப்பை ஏற்படுத்துகிறன.

பெண்களுக்கு எதிரான வன்செயல்களை இல்லாதொழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் பிரகாரம், "பெண்களுக்கு எதிரான வன்செயல்" என்பது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

"பொது வாழ்வில் அல்லது தனிப்பட்ட வாழ்வில் உடலியல், உளவியல் அல்லது பாலியல் ரீதியான இழப்பை ஏற்படுத்தக்கூடிய அல்லது ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள அல்லது அச்சுறுத்தலான அல்லது அத்தகைய ஒரு செயலின் மூலம் பெண்ணுக்குத் துன்புறுத்தலை ஏற்படுத்தும் அல்லது பலவந்தத்தைப் பிரயோகிக்கும், தான்தோன்றித்தனமாக பெண்ணின் சுதந்திரத்தைப் பறிக்கும் எந்தவொரு செயலும் வன்செயல் ஆகும்."

பெண்ணுக்கு எதிரான வன்செயல் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம், பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே நிலவும் சமநிலையற்ற தன்மையாகும். பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே நிலவும் சமூகத் தொடர்பின்பேரில் பெண் ஆணுக்குக் கீழ்ப்படிவதை நாம் இறுதி விளைவாகக் காண்கிறோம். இதற்குரிய அடிப்படைக் காரணம், எமது சமூகம் ஆணுக்கு அதிக அதிகாரத்தை எப்பொழுதும் பெற்றுக் கொடுப்பதாகும். குடும்பத் தலைவனாக, தீர்மானம் மேற்கொள்பவனாக ஆணைத் தெரிவு செய்திருப்பதாகும். ஆணாதிக்கம் நிலவும் ஒரு சமூகத்தில் இந்த அதிகாரம் ஆணுக்கு உரித்துடையதாக்கப்பட்டுள்ளது.

எனினும், தற்காலத்தில் ஆணாதிக்க எண்ணக்கருவின் மீதமைந்து விபரிக்கப்படும் குடிமுதல்வராட்சி, தந்தையரின் தலைமைத்துவம் (Patriarchy) எனும் விடயத்தைக் கருத்திற்கொள்ளும்போது மனிதகுல பரிணாமத்தின் தொடக்க கட்டம் வரை அது பரந்து செல்லவில்லை. அதாவது, மனிதகுல பரிணாமத்தின் முதற் கட்டத்தில் வீட்டின் ஆதிக்கம் பெண்ணுக்கு, எனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்கு உரியதாகவே இருந்தது. எவ்வாறாயினும், ஆணாதிக்க எணணக்கருவின பிரகாரம் குடும்பத்திலும் சமூகத்திலும் பெண் பலவீனமானவள் என்றும், இரண்டாம் வகுப்பு உறுப்பினர் என்றும் அடையாளங் காணப்படுவதுடன், ஆண் உடலியல் மற்றும் உளவியல் ரீதியிலும் பலம்பொருந்தியவனாகக் கருதப்பட்டு அவனுக்கு குடும்பக் கட்டமைப்பின் தலைவன் என்ற நிலையைப் பெற்றுக் கொடுத்துள்ளது. பிறப்பின்போது உயிரியல் ரீதியாக இடம்பெறும் பால் சார்ந்த வேறுபாடு தவிர்ந்தவிடத்து பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில் எந்தவொரு வேறுபாடு பற்றியும் கதைப்பது நியாயமானதன்று.

பெண்ணுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்செயல்களைக் கருத்திற் கொள்ளும்போது இல்லத்து வன்செயல் (Domestic Violence) மிக முக்கிய இடம் வகிக்கின்றது. அதற்குரிய காரணம், தான் பாதுகாப்பாக இருப்பதாக் கருதும் தனது வீட்டினுள் அதாவது தனது கணவன், சகோதரர்கள், தந்தை, ஏனைய உறவினர்கள் மூலம் இந்த வன்செயல் இடம்பெறுவதாகும். ஒரு வீட்டினுள் மனைவிமாரும் பிள்ளைகளுமே பெரும்பாலும் இந்த வன்செயலுக்கு உட்படுகின்றனர். அதற்குரிய காரணம், குடும்பத்தில் நிலவும் அதிகார சமமின்மையாகும். அதேபோல், கணவன் மனைவிக்கு தெய்வம் போன்றவன் எனக் கூறப்படும் பெண்ணுக்குப் பாதகமாக அமையும் பிராமணியக் கருத்தியல்கள் சமூகத்தில் இயன்றளவிற்கு வேரூன்றி இருப்பதாகும்.

**பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்செயல்கள், பெண்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுபவையாகும். அத்தகைய வன்செயல்கள் வயது, திருமண நிலை, இனம், மதம், கலாசாரம், வகுப்பு அல்லது வருமான நிலைமைகளைக் கருத்திற்கொள்ளாமல் எந்தவொரு நிலையிலான பெண் மீதும் பாதிப்பை ஏற்படுத்துகிறன.**

பொதுவாக, இல்லத்து வன்செயலானது ஒரு குற்றச்செயலைவிட திருமண வாழ்வின் ஒரு பகுதியாக சமூக வழக்கங்களால் அங்கீகரிக்கப்படுவதற்கு பழக்கப்பட்டுள்ளது. இத்தகைய வரவேற்பு காரணமாக இந்த வன்செயல் அதிகரித்துக் காணப்படுகின்றது. அவ்வாறே, வீட்டு வன்முறை ஒரு தனியான சம்பவமாக இடம்பெறுவதில்லை. உடலியல் துன்புறுத்தல் போன்றே பாலியல் துன்புறுத்தல், உளவியல் துன்புறுத்தல், பொருளாதார துன்புறுத்தல் என்பனவும் இதில் அடங்கும். இத்தகைய வன்செயல் காரணமாக பெண் கடும் உள வேதனையை அடைவதுடன், இந்த நிலைமை பெண்ணின் கீழ்ப்படிவுத் தன்மையை அதிகரித்து, அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக தாழ்ந்த மட்ட கவனிப்புக்கு இடடுச் செல்லும். பல்வேறு காரணங்களால் குற்றச்செயல்கள் பற்றி அறிக்கையிடப்படாமல் அல்லது அமிழ்ந்து காணப்படுகின்றது. இல்லத்து வன்செயல் பற்றி அறிக்கையிடப்படாமைக்குரிய காரணங்கள் ஏராளம் உள்ளன. அவற்றிடையே பொருளாதார ரீதியாக அடிமைப்பட்டிருத்தல், தனதும் பிள்ளைகளினதும் உயிருக்குள்ள அச்சம், வெட்கவுணர்வு, புரிந்துணர்வின்மை, பொலிசார் நடந்துகொள்ளும் விதம், அவர்களின் உளப்பாங்கு பற்றி நிலவும் அச்சம் போன்ற அம்சங்களைக் குறிப்பிடலாம்.

பெண்களுக்கு எதிரான வன்செயல் தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் விசேட பெண் பிரதிநிதி, வீட்டு வன்முறை (Domestic Violence) என்பதைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றார்:

"பெண்-ஆண் சமூகநிலையை அடிப்படையாகக் கொண்ட உடலியல், உளவியல், பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள், குடும்ப உறுப்பினர்களால் குடும்பத்தினுள் பெண்ணுக்கு எதிரான தாக்குதல் மேற்கொள்ளும் இயல்புடையதாக அல்லது கடுமையான உடலியல் தாக்குதலாக அல்லது கடத்திச் செல்லல் அல்லது அச்சுறுத்தலாக அல்லது பலவந்தப்படுத்தலாக அல்லது தரக்குறைவான சொற்பிரயோகம் மூலம் அல்லது சட்ட விரோதமான, முறைகேடான அணுகுமுறை மூலம் அல்லது சொத்துக்களுக்குச் சேதமிழைத்தல் மூலம் அல்லது விவாக பாலியல் துஷ்பிரயோகத்தின் மூலம் அல்லது சீதனம் அல்லது மணப் பெண்ணின் விலை அடிப்படையிலான பெறுமதி சார்ந்த ஒரு வன்செயலினால் அல்லது பெண்ணின் பாலியல் உறுப்புகளைச் சிதைத்தல் அல்லது விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தல் மூலம் சுரண்டிப் பிழைத்தல் அல்லது வீட்டுப் பணிப்பெண்ணுக்கு எதிரான வன்செயலைப் பிரயோகித்தல் மூலம் மேற்கொள்ளப்படும் வன்செயல் அல்லது அத்தகைய செயலைப் புரிவதற்கு எத்தனித்தல் வீட்டு வன்முறை என்பதில் அடங்கும்".

இந்த வீட்டு வன்செயல் தொடர்பில் செயலாற்றுவதற்காக பிரத்தியேகமான ஒரு சட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையைச் சுட்டிக்காட்டி நீண்ட காலமாக பெண் செயற்பாட்டாளர்களாலும், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள், பல்வேறு செயற்பாடுகள் முதலியவற்றின் விளைவாக 2005 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி "இல்லத்து வன்செயல்களைத் தடைசெய்வதற்கான சட்டம்" பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் சட்ட உதவி கோருவதற்கு எந்தவொருவராலும் முடியுமாக இருப்பதுடன், பால்நிலை வேறுபாடு, வயது வேறுபாடு அல்லது திருமணநிலை என்பன அதில் பாதிப்புச் செலுத்துவதில்லை. இந்தச் சட்டத்தின் பிரகாரம், பாதிப்புக்கு உள்ளாவோர் தமது பாதுகாப்புக் கருதி நீதவான் நீதிமன்றமொன்றின் பாதுகாப்புக் கட்டளையொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தச் சட்டம், தனியே தண்டனை அளிப்பதை விட பாதிக்கப்படுவோரின் பாதுகாப்புக்காக நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமாகும்.

வீட்டுப் பணிப்பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்செயலும் வீட்டு வன்முறையில் அடங்கும். இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண்களுக்கு எதிராக மத்திய கிழக்கு நாடுகளில் பாரிய அளவில் வன்செயல்கள் இடம்பெறுகின்றன. அதேபோல், இலங்கையிலும் இல்லங்களில் வீட்டுப் பணிப்பெண்களுக்கு பெருமளவில் துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிப்பெண்கள் எதிர்நோக்கும் துன்புறுத்தல்கள் தொடர்பாக எந்தவித கவனமும் செலுத்தப்படாதிருப்பதுடன், அத்தகைய பெண்களைப் பாதுகாப்பதற்கு வாய்ப்பளிக்கும் அல்லது அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்ட ரீதியான ஒரு பணிச்சட்டத்தையேனும் நாம் இங்கு காணமுடியவில்லை.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், பெண்களுக்கு எதிரான வன்செயல்களை இல்லாதொழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் பிரகடனம் ஆகியவற்றின் கீழ் விதித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களுக்கு மதிப்பளித்து இலங்கையும் அவற்றுடன் உடன்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்செயல்களை மேற்கொள்ளும் ஆட்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தல், தண்டனை அளித்தல், அத்தகைய பெண்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்காக அரசாங்கங்கள் செயலாற்ற வேண்டும். அதேபோல், குற்றச் செயல்களுக்கு இரையாவோருக்கு அவசியமான உதவிச் சேவைகளை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெண்-ஆண் சமூகநிலையை அடிப்படையாகக்கொண்டு பெண்களுக்கு இழைக்கப்படும் துன்புறுத்தல்களைத் தடை செயவதறகும் நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த வீட்டு வன்முறைகள் தொடர்பாக உள்ளூர் நிறுவனங்களில் பணியாற்றும் சமூக சேவையாளர் இருவர் கூறும் கருத்துகளை கீழே தருகிறோம்.■

ரசிகா தீபானி



கீதா

ஒரு குடும்பத்தில் வாழ்கின்ற ஆண்,பெண் இரு சாராரும் சுதந்திரமானதொரு வாழ்க்கையை நோக்கிச் செல்லும் வேளையில் பலம் வாய்ந்த ஒருவரால் பலம் குறைந்த ஒருவருக்கும் இடையில் உடலையும் உளத்தையும் பாதிக்கக்கூடிய வகையில் ஏற்படுத்தப்படும் வன்முறைகள் வீட்டு வன்முறைகள் எனப்படும்.

இவை பல வழிகளில் ஏற்படுத்தப்படலாம். அதாவது கட்டுப்பாடுகளை விதிப்பதனாலும், தடைகள், முறையற்ற பழக்க வழக்கங்களை விதிப்பதனாலும் துன்புறுத்தல்களாலும் ஏற்படுத்தப்படலாம்.

கணவன் மனைவிக்கிடையிலும், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலும் மற்றைய உறவினர்களுக்-கிடையிலும் இவ் வன்முறை ஏற்படலாம்.

கல்வித்தரம் குறைந்தவர்களிடம் மட்டுமின்றி கல்வி கற்றவர்களிடமும் இவ் வன்முறை ஏற்படலாம்.

கிராமங்களில் இவ் வன்முறைகளை வெளிப்படையாக காண முடிகின்றது. ஆனால் நகர்ப்புறங்களிலும் கல்வி கற்ற மக்கள் வாழும் இடங்களிலும் இவை நடைபெறுகின்றது. ஆனால் அவை மறைக்கப்பட்ட நிலையிலேயே நடைபெறுகின்றது. இப்பிரச்சனையை தீர்க்க ஒரு குழுவினரால் மட்டும் முடியாது. பலரது ஒத்துளைப்புடனும் அரசின் சார்புடனும் தீர்விற்கு கொண்டு வர முடியும். ஒவ்வெரு மக்களும் வன்முறை என்பதனை உணர வேண்டும்,சிந்திக்க வேண்டும், தீர்விற்கு முயற்சி எடுக்கவேண்டும். அனைவரும் சேர்ந்தால் தான் வன்முறையை ஒழிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசந்தகலா

வீட்டு வன்முறை என்பது உடல் உளரீதியாக ஏற்படுகின்ற பிரச்சனைகள் வன்முறை எனப்படும். அடித்து காயப்படுத்தி வருவது மாத்திரமல்ல வன்முறை பலவிதமானக நடைபெறுகிறது. சொற்களால் ஏசுதல், நாவினால் சுட்டவடு ஆறாது என்று கூறுவார்கள் அதைப் போன்றுதான் ஏசுவது குடித்துவிட்டு அடிப்பது மாத்திரமல்ல மாமியார் செய்கின்ற கொடுமைகள் மற்றும் உறவினர் செய்கின்ற கொடுமைகள் மற்றவர்களுடன் கதைக்க வேண்டாம் அழகாக உடுத்திப் போகக்கூடாது அங்கே போகாதே உறவினர்களுடன் கதைக்க வேண்டாம் பிள்ளைகளையும் சரி பெண்களையும் சரி கூடுதலான வேலை வாங்குதல் போன்றவற்றையும் வீட்டு வன்முறையாகக் குறிப்பிடலாம். கிராமத்தில் படிக்காத பாமர மக்கள் மத்தியில் தான் கூடுதலான வன்முறை நடக்கிறது என்று கூறுவார்கள். ஆனால் நகர் புறத்தில் படித்தவர்கள் உத்தியோகம் பண்ணுகிறவர்கள் மத்தியிலும் கூடுதலான வன்முறை நடக்கிறது. கிராமப் புறத்தில் கூடுதலாக வெளியரங்கமாக நடை பெறுகிறது. ஆனால் படித்தவர்கள் இரகசியமாக வன்முறைகளை நடாத்துகிறார்கள் இவர்கள் பிரச்சனைகளை வெளியில் செல்வதில்லை. ஏன் என்றால் கௌரவம் போய் விடும் என்பதினால், இதனால் பலர் மனப் பாதிப்புள்ளாகி வருவதற்கு வாய்ப்பு உண்டு. இதனால் தற்கொலை செய்வதற்கான வாய்ப்பு உண்டு. ஒட்டு மொத்தமாக குடும்ப வன்றை என்பது ஒருவருக்கு பிடிக்காத விடயத்தினை செய்ய இன்னும் ஒருவரால் நிர்ப்பந்திக்கப் படும் போது வீட்டு வன்முறை தோன்றுகின்றது.

இவர்களுடன் பேசியவர் காயத்ரி திவகலாலா

# உணர்வு கொல்லிகள்

"கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருசன்
கணவனே கண்கண்ட தெய்வம்
கவனமாக குறிப்பறிந்து
நடந்து கொள்"
கலியாணம் முடிய
ஆசிர்வாதத்துடன்
அறிவுரைகள் பல பகர்ந்து
அனுப்பி வைத்தனர்.
நானும்
கணவன் விடயத்தில்
கவனமாக நடந்து கொண்டேன்
ஆனால்,
என் ஆசைகள்
என் எதிர்பார்ப்புகள்
என் உணர்வுகள் மறுக்கப்பட்டன.
நான் மிதிக்கப்பட்டேன்
என் உடல்
தன் இச்சைக்கு எனக் கூறி
வேளை தவறாது
உயிரற்ற
உணர்வற்ற பொருள் போல
உபயோகப் படுத்தப்பட்டேன்.
என் உணர்ச்சிகள் செத்து
உயிரற்ற உடல் போல்
உருமாறிய போது
எனக்காக
நானே முடிவெடுத்தேன்.
என்னைச் சுற்றியுள்ள
கட்டுக்களை அவிழ்த்து
வெளியேறும் போது
மீண்டும்
சமூகத்தில் இருந்து சிலரின்
அனாவசிய அறிவுரைகள்
"பெண்ணுக்கழகு பொறுமை
அடக்கமாக இருந்து
அனுசரித்துச் செல்...."
தூக்கி வீசினேன் அவற்றைத் தூரமாக
அதனால்
கற்பு என்ற கட்டுக்கதைகளைக் கூறி
கட்டுப்பாடில்லாதவளாக
என்னைக் களங்கப் படுத்துகிறார்கள்.
பெண் உடலை
நுகர்ச்சிப் பொருளாகக் கொண்டு
என் உணர்ச்சிகளை
உருக்குலையச் செய்யும்
உணர்வு கொல்லிகளே
உணர்ந்து கொள்ளுங்கள்
என் உயிரிலும்
உணர்வு கலந்துள்ளது.



- குகநிதி குகநேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியவாதி எனப்படுபவர் யார்?

பெண் கல்வி, பெண் சுதந்திரம், பெண் விடுதலை, பெண் சமத்துவம் என்றெல்லாம் சமீப காலமாக மிகவும் அதிகமாக பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றது. இந்த சிந்தனைகள் அண்மையில் தான் ஏற்பட்டனவா? இல்லை, காலாதிகாலமாக வந்தவையா? அல்லது இது ஒரு மேற்கத்திய கலாச்சாரத்தின் பிரதிபலிப்பா?

இதனைப் பற்றித் தங்கள் அனுபவங்களையும் அறிவையும் அடிப்படையாகக் கொண்டு அவர்களின் அபிப்பிராயங்களைச் சொல்லும்படி ஒவ்வொரு படிநிலையிலுமுள்ள பெண்கள் சிலரிடம் கேட்டோம். அவர்கள் தமது கருத்தோட்டங்களைச் சுருக்கமாகச் சொல்கிறார்கள். இதோ அவர்களின் கருத்துக்கள்...



**தேவகௌரி மகாலிங்கசிவம்**
சுதந்திர ஊடகவியலாளர்

"எங்கெங்கெல்லாம் பெண்கள் பெண் என்ற ஒரே காரணத்திற்காக அடிமைப்படுத்தப்படுகிறார்களோ , அல்லது கீழ்ப்படுத்தப்படுகிறார்களோ அப்போது அதற்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் பெண்ணிலைவாதிகள் எனப்படுவர்."

---



**மாலினி பொன்சேகா**
நடிகை

பெண்களின் சுதந்திரத்தையும் பெண்கள் உரிமையையும் நான் மதிக்கிறேன். சமூகத்தில் பெண்களுக்கு மதிப்பு இல்லாத காரணத்தினாலேயே பெண்கள் இன்று பல பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்கின்றனர்.

இவ்வகையில் ஆண்களுடைய மனப்பாங்கினை மாற்றுவது மிகவும் அவசியமான ஓர் விடயம். இந்நாட்டுடன் ஒப்பிடுகையில் வேறு நாடுகளில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் பரந்த வேறுப்படுகள் காணப்படுகின்றன. இலங்கையில் நாம் இனத்தையும் கலாசாரம் மற்றும் மத ரீதியில் நோக்குகின்ற காரணத்தினால் பெண்களுக்கெதிரான பாராபட்சங்கள் வேறு பாடுகள் நடைபெறுகின்றன.

ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படக் கூடாது. சகலரும் சமத்துவமாக நடாத்தப்பட வேண்டும்.

---



**கலாநிதி குமாரி ஜயவர்தன**
சமூக விஞ்ஞானிகள் கூட்டமைப்பின் செயலாளரும், "மூன்றாம் உலக நாடுகளில் தேசியவாதமும் பெண்ணியமும்" போன்ற பல நூல்களின் எழுத்தாளருமாவர்.

கடந்த 35 வருட காலமாக பெண்களுக்கெதிராகவும் பெண்ணியவாதிகளின் மீது அவமானப்படுத்தும் வகையிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பெண்கள் சமாதானத்திற்காகவும், இனப்பாகுபாட்டிற்கு எதிராகவும் போராடியவர்கள். இதுவோர் புதிதான விடயமல்ல. பெண்ணியம் என்றால் என்ன என எவரேனும் வினாவினால் நாம் கூறுவதாவது: தொழில் புரியும் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகத்திற்கு எதிராகவும் ஆணாதிக்க தலைமைத்துவம் மற்றும் பெண்களை பணிய வைப்பதற்கெதிராகவும் பெண்களுக்கெதிரான பாராபட்சங்களை எதிர்த்துப் போராடும் இயக்கத்தினை பெண்ணியம் எனக் கூறலாம். இது ஜனநாயகத்திற்கான போராட்டத்தின் ஓர் பாகமாகும். ஜனநாயகத்திற்கு எதிராக போராடும் பொழுது பாகுபாடின்றி பெண்களின் உரிமைகளுக்கும் போராடுகின்றோம். பெண்ணியமானது பெண்களுக்கு மாத்திரமே என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுப் படுத்தப்படவில்லை. ஆண்களும் பெண்களுக்கு இதில் ஆதரவு வழங்கலாம். சமத்துவ உரிமைக்கான பெண்களின் போராட்டத்திற்கு ஆதரவு அளித்த பல ஆண்கள் உள்ளனர். எதிர்காலத்திலும் இவ்வாறே இருத்தல் வேண்டும். சமத்துவமானது ஓர் சமூகத்திலுள்ள அனைவரையுமே உள்ளடக்க வேண்டும். சட்ட மறுசீரமைப்பு, கல்வியை பெற்று கொள்ளல் போன்ற உரிமைகளுக்கு அனைவருமே போராட வேண்டும். இவ்வியக்கங்களானது அரசாங்கங்களை கவிழ்ப்பதையோ அல்லது குடும்பங்களை பிரிப்பதையோ குறிக்கோளாகக் கொண்டிருக்கவில்லை. இவர்கள் சமூகத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் நாட்டை சகல விதத்திலும் அபிவிருத்தி செய்வதற்குமான போராட்டத்தின் ஓர் பகுதியே ஆகும். அது எங்கள் நாட்டில் மாத்திரம் நிகழும் முக்கியமான ஓர் விடயமல்ல. இவ்வாறான போராட்டங்களும் இயக்கங்களும் உலகிலுள்ள அனைத்து நாடுகளிலுமே காணப்படுகின்றது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.



**சர்வம் கைலாசபதி**
அபிவிருத்தி ஆலோசகர்.

"தன்னுடைய சகோதரிகளின் அடிமைத்தனத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பவர் பெண்ணிலைவாதி" அவ்வாறு குரல் கொடுக்காவிட்டால் பெண்கள் எப்போதும் அடக்கப்படுவார்கள் என நினைப்பவரும் பெண்ணிலைவாதியே.



**நிமல்கா பெர்ணாந்து**
சட்டத்தரணி மற்றும் பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்

வாழ்கையைப் பற்றி கனவு காண்பவர் பெண்ணியவாதி. அவளுடைய பழங் கனவு அக்கால கட்டத்திலிருந்த அதிகார கட்டமைப்பின் கீழ் வீட்டினுள்ளேயே காணப்பட்டது. புதிய கனவானது ஜனநாயகக் கோட்பாடுகளைக் கொண்ட பரஸ்பர மனித உறவுகளாகும். இக் கோட்பாடுகள் குடும்பத்திலும் சமூகத்திலும் இடம்பெறும் அனைத்து விடயங்களுக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும். சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளை பராமரிப்பது மற்றும் ஓர் உறவு முறையை மேற்கொள்வது ஆண்கள் மற்றும் பெண்களின் கைகளிலேயே உள்ளது. இதுவே பெண்ணியத்தின் ஓர் முக்கிய பகுதியாகும். பொதுவான மற்றும் தனிப்பட்ட அனுபவங்கள் வெவ்வேறானவை அல்ல இரண்டும் ஒன்றே. போலித்தன மற்ற ஓர் உலகே எங்களுடைய கனவு என்கின்றோம். இக் கனவின் மறுப்பக்கமானது சமூகத்திற்கு, பிள்ளைகளுக்கு, பெற்றோருக்கு, மற்றும் யாரிடமும் எதையேனும் மறைத்து வாழ வேண்டும் என்ற குற்ற உணர்வின்றி தங்களுடைய வாழ்க்கையை கொண்டு செல்லும் பெண்களையும் ஆண்களையும் ஈன்றெடுத்த ஓர் உலகமேயாகும். இதுவே எனக்கு பெண்ணியமாக தெரிகின்றது. எதிகார ஒருவர் தனக்கும் ஓர் சமூகத்திற்கும் உருவாக்கும் அதிகார தலைமைத்துவமற்ற ஓர் புதிய உறவு முறையை இது குறிக்கின்றது. பெண்ணியமானது ஓர் வாழ்க்கை முறையாக இருத்தல் வேண்டும்.

" பெண்ணிலைவாதம் என்றால் என்ன என்பது பற்றி என்னால் ஒரு போதும் கூற முடிந்ததில்லை. ஆனால் உறங்கிக்கிடப்பவரில் இருந்து வேறுபடும் வகையில் நான் உணர்வுகளை வெளிப்படுத்தும் போது பெண்ணிலைவாதியென அழைக்கப்படுகின்றேன் என்பது மாத்திரம் எனக்குத் தெரிகிறது. "

- றிபேக்கா வெஸ்ட் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலையும் வலியையும் வரமாகப் பெற்ற பெரு மூதாட்டி பாலஸ்தீனக் கவிஞர்

# ஃபதுவா துகான்

காதலையும் வலியையும் பாடியவராகவும் தமது நாட்டின் இழப்பையும் அடிபணிய மறுக்கும் தன்மையையும் வீரியமாக வடித்தவராகவும் சிறப்பிக்கப்படும் பாலஸ்தீன அராபியக் கவிஞரான கவிஞர் **ஃபதுவா துகான்** (1.3.1917 - 12.12.2003) தமது சமகால அராபியக் கவிஞர்களுள் சிறந்த முன்னோடியாகக் கருதப்பட்டார். "இருபது திரிப்படைகளை எதிர் கொள்வதற்கு இணையானது துகானுடைய கவிதைகளைப் படித்தல்" என்று இஸ்ரேலிய ஜெனரல் மோஷே தயன் (Moshe Dayan) சொல்வது அவரது கவிதை வீச்சினைப் புலப்படுத்துகிறது. 1971 பாலஸ்தீனில் உள்ள நபுலஸ் (Nabulas) எனும் ஊரில் பிறந்த இவர் கவிஞராகவும், நாடக ஆசிரியராகவும், ரேடியோ பலஸ்தீன இயக்குனராகவும் இருந்து தமது சகோதரன் இப்ராகிம் துகான் மூலம் தான் கவிதைகளின் அறிமுகத்தைப் பெற்றார்.



பாலஸ்தீனத்தின் கூரை இடிந்து வீழ்ந்த போது, நபுலஸ் பெண்களின் முகத்திரையும் விழுந்தது

தொடக்கத்தில் இயற்கை, காதல், தனிமை, சோகம், ஆகியவற்றை மையமிட்ட கவிதைகளை இயற்றினார். 1967ல் மேற்கு கரை (West Bank) காசா (Gasa Strip) பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்த பின்னர் தேசியம் சார்ந்த கவிதைகளை எழுதினார். தொடக்கத்தில் மரபு வடிவத்தில் எழுதினாலும் பிறகு கட்டற்ற கவிதை (Free Verse) எழுதிய முன்னோடிகளில் ஒருவராவார். திருமணம் செய்து கொள்ளாமலேயே வாழ்ந்த இவர் ,காதலை ஆய்ந்து கண்டறிய முனையும் பெண்ணின் வெளிப்பாட்டையும் சமூக எதிர்ப்பையும் தம் கவிதைகளில் கையாண்டார். தனி மனிதர் மற்றும் தேசத்தின் காதலையும் இழப்பையும் கவிதைக் கருவாகக் கொண்டதனால் "காதலையும் வலியையும் பாடிய கவி" என அழைக்கப்பட்டார். 1967 இற்குப் பிறகு நாட்டுப்பற்றுக் கவிதைகளை எழுதத் தொடங்கினார். இவர் தம் தேசியக் கவிதைகள் மண்ணும் சுதந்திரமும் பறிக்கப்பட்ட அவர் நாட்டு மக்களின் போராட்ட வாழ்வைச் சொல்வன, ஆக்கிரமிப்பின் கொடூரத்தைச் சொல்வன.

இவரது முதிர்சியின் தொடக்கத்தைச் சுட்டி, மேலும் முற்போக்கான, துணிகரமான, தைரியமான கவிஞராக இவரை அடையாளம் காட்டியது இவரது இரண்டாவது தொகுப்பான **நான் அதனைக் கண்டு கொண்டேன்** (I found it-1958) முதன் முதலில் காதலை வெளிப்படையாகப் பேசிய அராபியப் பெண் கவிஞராக இவரை விமர்சகர் சல்மா கத்ரா ஜய்யுசி சுட்டுகிறார். அதிர்ச்சி, நம்பிக்கை இழப்பு, பலியாக்கப்படுதல் என்பவற்றில் இருந்து மனவுறுதி,எதிர்ப்பு, புதுப்பிக்கப்பட்ட பெருமை என்பதாக பாலஸ்தீன அரசியல் உணர்வு நிலை பரிணாம வளர்ச்சி பெறும் பாதையைக் காட்டுகின்றன.

பாலஸ்தீனப் போராட்டத்தை மையமிடாத- **ஹென்றியின் பார்வை** (Vision of Henry) போன்ற கவிதைகளும் கூட இழந்த மண்ணை நினைவு கூறுகின்றன. அவை தப்பித்தலுக்கும் நினைவு எனும் **கரும்பாறைக்கும்** இடையிலான மோதலை வெளிப்படுத்துகின்றன. எல்லையைக் கடப்பதற்காக் காத்திருக்கும் கொடுமை, வீடுகள் இடிக்கப்படும் அவலம், குழந்தைகளின் புரட்சி ஆர்வம் எனக் கவிதையில் சொல்லப்பட வேண்டிய பல புதிய விடயங்களை 1967இன் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு கொணர்ந்தது. இருந்தும் இதுவரையில் அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படாதிருந்த எதிரிக்கும் மண்ணுக்குமான பந்தத்தை இவர் கவிதைகள் காட்டுகின்றன.

இவரது **அழிக்கப்பட்ட கிராமங்கள்** எனும் கவிதை ஈழத்துக் கவிஞர் சு.வில்வரத்தினத்தின் **காற்றுக்கு வந்த சோகம்** கவிதையை நினைவூட்டுகின்றது.

..................

வீடுகளே, பிரச்சனைகள் உங்களை
என்ன செய்து விட்டன,
உங்களில் வசித்தவர்கள் எங்கே?
அவர்கள் பற்றிய செய்தி
கிடைத்ததா? அவர்கள் இங்கிருந்து
பழகியவர்கள்,
கனவு கண்டவர்கள்:
வருங்காலத்திட்டங்களை வகுத்தவர்கள்-
அந்தக் கனவும் வருங்காலமும் இப்பொழுது
எங்கே?
அவை எங்கே சென்று விட்டன?
இடிபாடுகள் மௌனமாயிருந்தன
வெறுமையைத் தவிர எதுவுமேயில்லை:
(அழிக்கப்பட்ட கிராமங்கள்)

என்ற ஃபதுவா துகானின் கவிதை வரிகளும்

"அட சாவிலும் கூட ஒரு வாழ்விருந்த
கிராமம் இது
காற்றுப் பரிதவித்தது.
"எங்கே போயின இந்த உறவுகள்?
ஒன்றும் விளங்காமல் அந்தரித்து
அதற்கெங்கே தெரியும்?
காற்றுறங்கும் அகாலத்தில் தான்
மூட்டை முடிச்சுக்களோடு மக்கள்
கிராமத்தை விட்டுப்போன கதை
........................
வீதியில் தலை நீட்டிய முட்செடி யொன்றை
வேலியோரமாய் விலக்கியபடியே
மெல்ல நடந்த காற்று
சொல்லிக் கொள்ளாமல் போன
புதல்வரைத் தேடும்
சோகந்தாளாத தாயைப் போல")
(காற்றுக்கு வந்த சோகம்)

என்ற வில்வரத்தினத்தின் கவிதை வரிகளும் புலப்பெயர்வால் வெறிச் சோடிப் போகும் கிராமங்களின் வெறுமைகளை, அந்த வெறுமையின் கனத்தைச் சுமந்து இடம்பெயரும் மக்களின் ஆறாத வேதனையை உணர்த்துகின்றன. பாலஸ்தீனமோ, ஈழமோ புலம் பெயர்தலின் சோகமும் அலைவும் மாறாத ரணமாய்க் கொல்லும் என்பதை கவிதை சொல்லில் வடிக்கிறது.

சுயசரிதை எழுதுவதென்பது ஓர் அராபியப் பெண்ணைப் பொறுத்தவரை, வயது வேறுபாடின்றி, எளிமையான செயலன்று. ஏனெனில் அது ஒரு பக்கம் சமூகக் கட்டுப்பாடுகளையும் மறுபக்கம் அந்த வடிவத்திற்கேயுரிய கட்டுப்பாடுகளையும் கொண்டது. ஆனாலும் துணிந்து தமது வாழ்வை **ஒரு மலைப் பயணம்** (A Mountainous Journey-1955) **மிகக் கடினமான பயணம்** (The Most Difficult Journey) என இருபாகங்களில் பதிவு செய்தார். கலையார்வம் ததும்பும் பின் புலம் உள்ள பழமைவாத மரபுக் குடும்பத்தில் வேண்டப்படாத குழந்தையாக சர்வாதிகாரத் தந்தைக்கும் அடங்கிப் போகும் தாய்க்கும் இடையில் அவர் துன்புற்றார். பள்ளிக்குச் செல்ல அனுமதிக்கப் படவில்லை. இறுக்கமான விதிகளினால் சூழப்பட்ட தமது குழந்தைப் பருவத்தையும் விடலைப் பருவத்தையும் தமது சுயசரிதையில் நெகிழ்வுறச் சொல்கிறார். 1948இல் ஜஃப்பா, ஹைப்பா, மேற்கு எருசலேம் நகரங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் நபுலசுக்கு வந்தமை, பாலஸ்தீனியருக்கு நேர்ந்த கோரம், நிலவுடைமையின் சரிவு, தந்தையின் மரணம் ஆகியன ஒரு விடுதலை உணர்வைத் தோற்றுவித்தன. சட்டென படித்த இளம் பெண்கள் சக ஆண்களுடன் சகஜமாகப் பழகுதல் சாத்தியமாயிற்று. "பாலஸ்தீனத்தின் கூரை இடிந்து வீழ்ந்த போது, நபுலஸ் பெண்களின் முகத்திரையும் விழுந்தது" என்றார். ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளில் பரவலாகப் பயணம் செய்த இவர் தமது புலம்பெயர் வாழ்வின் ஊடாகப் பெற்ற அனுபவங்களுடன் சொல வன்மையைச் சேர்த்து, கட்டுப்பாடற்ற புலனின்பப் பரவச உணர்வுகளை வெளிப்படுத்தினார். நெரிசல் மிகுந்த கூட்டில் அடைக்கப்பட்ட பறவைகளென அராபியப் பெண்கள் வீட்டில் மறைக்கப்பட்டனர் என்று சுயசரிதையில் கூறுகின்றார். இஸ்ரேல் மட்டுமன்றி, பெண்களை நடத்திய முறைமையால் அராபியச் சமூகமும் அவருக்கு எதிரி ஆகிற்று.

இஸ்ரேலியப் பெண்ணியவாதிகள் எல்லைக்கப்பால் உள்ள சகோதரியின் எதிரொலியாக இவரது கவிதையைக் கண்டனர். ஆனால் பல இஸ்ரேலியர்கள் இவரது அரசியல் பகுப்பாய்வு வருந்தத்தக்க வகையில் இரட்டைப் பரிணாமம் உடையது என்றனர். அராபிய சமூகத்தின் மீதான இவரது தாக்குதல்கள் கீழை நாட்டவர் மீதான மேலை நாட்டவரின் முன் மதிப்பீடுகளை (Prejudices) உறுதிப் படுத்துவனவாக உள்ளன என்று சில பாலஸ்தீனர்கள் குறை கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொற்களின் உண்மையான வன்மை, போர்ப்படிமத்தில் இருந்து பெறப்பட்டதன்று.மாறாக பாலஸ்தீன அடையாளத்தின் உறுதிப்படுத்தலில் இருந்தும் மண்ணுக்குத் திரும்பும் கனவில் இருந்தும் பெறப்பட்டது.

வரலாற்றுச் சங்கிலியின் ஒரு கண்ணியாகத் தன்னைத் தானே சித்தரிக்கும் ஃபதுவாவின் குரல் போரிடும் குரலன்று. இழப்பை, மறுப்பை மென்மையாகவும் வலியுறுத்தியும் இதயபூர்வமாகச் சொல்லும் ஓர் குரல். காதலைத் தேடி விதியையும், பாடலையும் பூவையும் தேடிக் கல்லறையையும் பீரங்கியையும் அடைத்த குரல். இழப்பின் புலம்பலும் வன்முறையும் நிறைந்த உலகத்திற்கு எதிராகப் போரிட்டு, அநாதையான காதலையும் ரோஜாவையும் பாடிய குரல்.

**இவருடைய கவிதைத் தொகுதிகள்**

- நாட்களுடன் தனியாக
  Alone With The Days - 1952
- நான் அதனைக் கண்டு கொண்டேன்
  I found it - 1958
- எமக்கு அன்பைத் தாருங்கள்
  Give us Love - 1960
- மூடிய கதவுக்கு முன்
  In front of the Closed Door - 1967
- விடுதலைப் போரும் மண்ணும்
  The Fida: and the land - 1968
- குதிரை வீரரும் இரவும்
  Horsemen and the night -1969
- உலகின் உச்சியில் தனியாக
  Alone on the summit of the world - 1973
- இரவும் பகலுமான பயங்கரக் கனவு
  The nightmare of the Night and Day - 1974

இவை தவிர நவீன அராபியக் கவிதை: ஒரு தொகுப்பு (Morden Arabic Poetry:An Anthology) என கொலம்பிய பல்கலைக்கழக அச்சகம் 1987இல் வெளியிட்ட தொகுதியிலும் இவருடைய கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

## நிலையம் மூன்று: அழிக்கப்பட்ட கிராமங்கள்

இதயம் சொன்னது :

வீடுகளே, பிரச்சனைகள் உங்களை என்ன செய்துவிட்டன,
உங்களிடத்தில் வசித்தவர்கள் எங்கே,
அவர்களைப் பற்றிய செய்திகள் கிடைத்ததா?
அவர்கள் இங்கிருந்து பழகியவர்கள்,கனவு கண்டவர்கள்,
வருங்காலத் திட்டங்களை வகுத்தவர்கள்·
அந்தக் கனவும் வருங்காலமும் இப்பொழுது எங்கே?
அவை எங்கே சென்றுவிட்டன?
இடிபாடுகள் மௌனமாயிருந்தன
வெறுமையைத் தவிர எதுவும் பேசவில்லை.

### ஒரு வாழ்க்கை

கண்ணீராய் என் வாழ்வு
ஒரு கவிதை நூலுக்காகவும் லூட் இசைக்காகவும்
ஏங்கும் ஒரு பரிவான இதயம்

என் வாழ்க்கை, சோகம் நிறைந்த வாழ்க்கை
ஒருவேளை அதன் நிழல் உருவம் நாளை மறைந்து போனால்,
ஓர் எதிரொலி புவியில் இருக்கும்,
எனது குரல் ஒலிக்கும் மீண்டும் மீண்டும்:
கண்ணீராய் என் வாழ்வு
ஒரு கவிதை நூலுக்காகவும் லூட் இசைக்காகவும்
ஏங்கும் ஒரு பரிவான இதயம்
.....................................................

நிசப்தம் முடிவற்ற ஆழமாகும்
சோக இரவுகளில்
எனதன்புக்குரியோரின் ஆவிகள்
கனவுத்திரளாய்
நீறு பூத்த நெருப்பாய்
என் முன் கடந்து சென்று
என் தலையணையைக் கண்ணீரால்
கல்லறை இருளில்
அடைந்து கிடக்கும் இறந்தவருக்கான
ஏக்கக் கண்ணீரால்
நனைக்கும்.
.....................................................

இப்பொழுது நான் தலை வணங்குகின்றேன், தனியாக
தொலைந்த ஒரு தொடுவானம் இடி முழக்கும் உள்ளே
கவிதைகள் மட்டும் தான் என் புகலிடம்
அவற்றில் வடிக்கிறேன் என் ஏக்கங்களை
அப்பொழுது தான் இவ்வாத்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியுறும்.

........................................

(லூட்-யாழ் வீணை போன்ற ஒரு இசைக்கருவி.)

## பாறை

விதியினதும் காலத்தினதுமான அடக்கும் சங்கிலியால்
ஒரு கரும்பாறை என் இதயத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது.
அது எப்படி என் பழங்களையும் பூக்களையும் நசுக்குகிறது பார்
ஆயுளுக்கும் அது எனது வாழ்வையும் இருப்பையும் நொறுக்கியுள்ளது.
என்னைத் தனியே விடுங்கள்,இந்தப் பாறையை மீறி வரமாட்டேன்.
என்னைக் குறுக்கும் சங்கிலிகள் என்றுமே உடைக்கப்படமாட்டா.
என் தனிமையில் தனித்திருப்பேன்
விதியே என் காவலாய் இருக்கும் வரை.
என்னை இப்படியே விடுங்கள்,
வெளிச்சமில்லை,நாளையில்லை, நம்பிக்கையில்லை,
கரும்பாறையிடமிருந்து தப்பித்தல் இல்லை
என்னிலை மறந்து பாறையை அகற்ற முயன்றேன்:
வாழ்வின் மையத்தையே ஊடுருவினேன்:
அனைத்துத் திக்குகளிலும் சென்றேன்:
பாடினேன், இளமையின் ஊற்றுக்களில் உவகையுற்றேன்:
போதையேறும் வரை பையித்தியம் போல் குடித்தேன்:
போதையேறும் வரை பையித்தியம் போல் குடித்தேன்.
உவகையின் உலகில் அடிக்கடி என்
வலியையும் துர்ப்பாக்கியத்தையும் மடைமாற்றி விட்டதாக எண்ணினேன்:
பறவையைப்போல் ஆடினேன் கூவினேன்.
ஆனால் துர்ப்பாக்கியத்தின் ஆழத்தில்,
நடுங்கியபடி,
தூரத்து இடி முழக்கமாய் எனது ஆன்மா:
"நீ எப்போதும் தப்பிக்க மாட்டாய்: நான் இங்கிருக்கிறேன்
என்று ஒலித்துக் கொண்டு இருந்தது.
கரும்பாறைப் பிசாசு
மீண்டும் தன் கோர உருவமுடன் எழுகிறது.
வீணே அதை அகற்ற முயல்கிறேன்.
வீணே தப்பிக்க முயல்கிறேன்
விதியின் பிடியிலுள்ள பிற கைதிகளிடம்
ஆறுதல் தேடி
துர்ப்பாக்கிய தேசத்தில் திரிந்தேன்.
கூட்டங்களையும் தேசங்களையும் கண்ணீரையும்:
கடந்து சென்றேன்:
மனிதக் கூட்டத்தின் வெற்று முதுகிலும் அயர்ந்த கழுத்திலும்
அங்கு சாட்டையடிகள் விழுந்தன,
அடிமைகள் நசுக்கப்பட்டு
இரத்தத்திலும் கண்ணீரிலும் மூழ்கடிக்கப்பட்டனர்.
துர்ப்பாக்கியத்தின் நடுவில் ஆறுதல் தேடினேன்.
கரும் பாறையிடமிருந்து தப்பிக்க வழியே இல்லை.
அது சாபமென என்னுடன் பிறந்தது,
என் வாழ்வின் ஒவ்வொரு அடியிலும்
நிழலாய்ப் பின் தொடரும் ஊமைத்துயரம்.
விசையுடன் என் நெஞ்சில் அது ஏறி நின்றது:
என்னால் எப்பொழுதும் வெல்ல முடியாதது இப்பாறை:
என்னைப் பிணைக்கும் சங்கிலிகள் என்றுமே உடைக்கப்படமாட்டா.
எனது போராட்டத்தைப் புதுப்பித்துக் கொள்வேன்
தனியாக:
கரும்பாறை நசுக்குகிறது தப்பிக்க வழியுமில்லை.

## பிரார்த்தனை

இறைவா,
திரும்பி வந்து துக்கம் கொண்டாலும்
அதிலும் சொல்லொணா மகிழ்ச்சியடைந்த மேரியைப் போல,
வெறுமையிலிருந்து நம்பிக்கையையும்
அச்சத்திலிருந்து ஆற்றலையும்
துக்கத்திலிருந்தும் இழப்பிலிருந்தும் புது வாழ்வையும் கொண்டு வா.
அடக்கு முறையாலும் போராலும் புலப்பெயர்வாலும்
திட்டமிட்ட அழிப்பாலும்
வீடுகளை இழந்தோருக்கு ஆறுதல் அளி.
பாதுகாப்பையும் உறைவிடத்தையும்
நம்பகம் மிக்க அண்டைவீட்டாரையும் கொடு,
அவர்களுடன் இரு,
அமைதியின் புதிய அறிகுறியை உலகுக்குக் கொடு,
ஆமென்.

(கட்டுரையும் கவிதை மொழி பெயர்ப்பும் இரெ.மிதிலா

நன்றி : பனிக்குடம். இதழ் 4. ஜூலை-செப்டெம்பர் 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான் நூறு குழந்தைகளுக்கு மேல் பெற்றெடுக்க உதவியுள்ளேன்"



## தெரேஸம்மா

இது தெரேஸம்மாவின் கதை. பருத்துறையில் கடந்த 26 வருடங்களாக வீட்டில் நடைபெறும் பல பெண்களின் மகப்பேற்றிற்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளார். சுகாதார சேவையிலோ மற்றும் மகப்பேற்று சுகாதாரத்திலோ எவ்வித அடிப்படைப் பயிற்சியுமின்றி இந்நாள் வரைக்கும் பாதுகாப்புடன் குழந்தைகளை பெற்றெடுத்துக் கொடுப்பதில் பெண்களுக்கு உதவியாய் இருந்து வந்துள்ளார்.

கர்ப்பிணியாகவிருந்த அவருடைய ஒன்றுவிட்ட சகோதரியின் வீட்டிற்குச் சென்றிருந்த வேளையிலேயே இவரது சகோதரியின் மகப்பேற்றிற்கு முதன்முறையாக உதவினார். அவரது சகோதரி மகப்பேற்று வலியால் துடித்துக் கொண்டிருக்கும் வேளையில், அங்கிருந்தவர்கள் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்தனர். அவரது ஒன்றுவிட்ட சகோதரியின் தாய் கண்ணீர் மல்க தெரேஸம்மாவிடம் வந்து ஏதாவது செய்யும்படி கெஞ்சினார். "இதன் காரணமாக என்னுடைய சகோதரியை நான் படுக்கையறைக்குக் கொண்டு சென்றேன். அப்பொழுது குழந்தையின் தலை வெளியே வரத் தொடங்கிவிட்டது. நான் உடனே பிள்ளையை மெதுவாக வெளியே எடுக்கும் முயற்சியில் இறங்கினேன். பின்னர் ஒரு கத்தியால் தொப்புள் கொடியை வெளிப்புறமாக அறுத்து, பிள்ளையைச் சுத்தம் செய்தேன்."

தெரேஸம்மாவின் மூன்று பேரக்குழந்தைகளும் அவர் மூலமாகவே பெற்றெடுக்கப்பட்டனர் என்பது குறிப்பிடதக்க ஓர் விடயம். புதிதாய் பெற்றெடுக்கப்பட்ட குழந்தை உடனடியாக அழாத பட்சத்தில் அவர் தனது இரண்டு விரல்களால் குழந்தையின் நாக்கை கீழ் நோக்கி மெதுவாக இழுத்து அழச் செய்வதுண்டு.

மகப்பேற்றிற்காக வைத்தியசாலை செல்ல வேண்டுமா என வினாவும் பொழுது, அவர் ஒரு பொழுதும் இல்லை என மறுப்புத் தெரிவிக்க மாட்டார். ஆனால் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை தோன்றிவிடுமாயின் அவர்கள் தெரேஸம்மாவை வரவழைப்பார்கள். அவருக்கு அழைப்புவிடுக்கப்படும் ஒவ்வொரு முறையும் மறுக்காது தாமதமின்றிச் செல்வார். அவ்வாறு செல்லும் ஒவ்வொரு முறையும் அவரது வெற்றிலைப் பையை எடுத்து செல்ல மறக்கமாட்டார். அவர் பார்த்த மகப்பேற்றில் குழந்தைகள் எவ்வித பிரச்சனையுமின்றிப் பாதுகாப்பாக பெற்றெடுக்கப்பட்டமைக்கான காரணம் ஆண்டவரின் ஆசீர்வாதமே என்பது அவரது திடமான நம்பிக்கை. அவர் மகப்பேறு பார்த்த எந்தவொரு குழந்தையும் இறந்து பிறந்ததாகவோ அல்லது பெற்றெடுத்த பின்னர் இறந்ததாகவோ இல்லை. சில சந்தர்ப்பங்களில் பெண்ணை வைத்தியசாலைக்குத் தாமதித்து கூட்டிச் செல்லும் பொழுது, அப்பயணம் ஆபத்தானது என அவருக்குத் தென்பட்டால், அப்பெண்ணின் குடும்பத்தாருக்கு கூட்டிச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலோசனை கூறுவார்.

யாழ்ப்பாணத்தில் இந்திய சமாதானப் படையினர் குடி கொண்ட பொழுது வீடுகளிலேயே அநேக மகப்பேறுகள் நடை பெற்றன என நினைவுகூர்ந்தார். அதற்கான காரணம், இந்தியப் படையினர் பெண்களை முக்கியமாக இரவு நேரங்களில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை என்பதேயாகும்.

சுனாமிக்குச் சற்று முன்னர் அவருக்கு மகப்பேறு ஒன்றிற்காக வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் தெருமுனையில் ராணுவ பரிசோதனை ஸ்தலமொன்று காணப்பட்டதன் காரணமாக தன்னுடைய இளம் வயது மகளைத் தனியே வீட்டில் விட்டுச் செல்லத் தயங்கினார். எனினும் அக்கர்ப்பிணிப் பெண்ணின் குடும்பத்தார் தொடர்ந்து தனக்கு அழைப்புவிடுத்த காரணத்தினால் தன்னுடைய மகளைக் கவனமாக இருக்கும்படி அறிவுறுத்திச் சென்றார் எனக்கூறினார்.

1936 டிசம்பர் 23ல் தெரேஸம்மா, ஒரு கத்தோலிக்கராக இவ்வுலகிற்கு கொண்டுவரப்பட்டார். அவருக்கு ஒன்பது சகோதர சகோதரிகள் இருந்தனர். ஆனால் அனைவரும் போருக்குப் பலியாகினர். இன்று தெரேஸம்மா மாத்திரமே தப்பியுள்ளார். அவர் 14 வயதில் திருமணம் முடித்து, தன்னுடைய முதல் குழந்தையை 16 வயதில் பெற்றார். இருபது வருடங்களில் இன்னும் ஐந்து குழந்தைகளுக்குத் தாயானார். கருத்தடுப்பு முறைகள் மற்றும் லூப் முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி தெரிந்திருந்த பொழுதிலுங்கூட இயற்கைக் கருத்தடுப்பு முறைகளான சீர்பிரமாண ஒழுங்கு முறையைக் கையாண்டார். இளம் கர்ப்பிணித் தாய்மார்களின் மகப்பேற்றை கவனிக்கும் அதேவேளை அடுத்தடுத்து கர்ப்பம் தரிக்காது குழந்தைகளைப் பெற்றெடுப்பதில் இடைவெளி பேண வேண்டுமென அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதுமுண்டெனக் கூறினார்.

1980களில் மீனவரான தெரேஸம்மாவின் கணவர் கடலுக்குச் செல்வதை தவிர்த்துக் கொண்டார். அந்நாள் தொடக்கம் தெரேஸம்மா கருவாடு விற்று பெறப்படும் சிறு வருமானத்திலேயே அவர்களது வாழ்க்கைப் பயணம் நடைபெற்றது. அவரது கணவர் சுகயீனம் காரணமாகக் காலமானார். கணவரின் மரணம் வரைக்கும் 40 வருடக்காலமாக அவர்கள் கடற்கரையிலேயே வசித்து வந்தனர். 50 வருடகாலமாகக் கணவருடன் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கையை எண்ணி தெரேஸம்மா கண் கலங்கினார். தெரேஸம்மா சேமித்த பணத்தைக் கொண்டே அவர்களது வீடு கட்டப்பட்டது. அவ்வீட்டை அவரின் ஐந்து மகள்மாருக்காகவும் ஒரு மகனிற்காகவும் கட்டினார் எனத் தெரிவித்தார்.


தெரேஸம்மா தனது பிள்ளைகள் பேரக்குழந்தைகளுடன்...

26 டிசம்பர் 2004 அன்று இவருடைய வீட்டோடு பல்லாயிரக்கணக்கான மக்களின் வீடுகளும் உடமைகளும் இலங்கையின் கடலோரப் பகுதிகளை அழித்த கொடூர சுனாமிப் பேரலைகளினால் கொண்டு செல்லப்பட்டது. மறக்க முடியாத அந்நாளன்று சுனாமி பேரலைகள் பூமியை நோக்கி வரும் ஓசையானது துப்பாக்கியினால் சுடப்படுவது மற்றும் வானூர்திகள் பறப்பதைப் போன்றே ...தில் விழுந்ததாகத் தெரேஸம்மா நினைவுகூர்ந்தார். சிலர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் போர் மீள ஆரம்பித்து விட்டதென எண்ணினர். சிலர் 'பூமியினுள் கடல் ஊடுருவுகின்றது' என கூக்குரலிட்டுக் கூறி, சகலரையும் தங்களது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளுமாறு எச்சரித்தனர். தெரேஸம்மாவின் கர்ப்பிணி மகளொருவர் அதிர்ஷ்டவசமாக கொழும்பு கொச்சிக்கடையில் அத்தருணத்தில் இருந்ததையிட்டு கடவுளுக்கு நன்றி கூறினார்.

பகிர்ந்தளிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களை பொறுத்த வரையில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் தேவையற்றவை என தெரேஸம்மா தனது அதிருப்தியைத் தெரிவித்தார். "நான் என்னுடைய சகல பற்களையும் இழந்துவிட்டேன் எனினும் பல்தேய்க்கும் தூரிகை மற்றும் பற்பசை எனக்குக் கொடுக்கப்பட்டது." "என்னுடைய மாதவிடாய் நிறுத்தம் எப்பொழுதோ ஆரம்பமாகிவிட்டது எனினும் எனக்கு மாதவிடயின் பொழுது பாவிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் கொடுக்கப்பட்டன". "இப்பொருட்களைக் கொண்டு என்ன செய்வதென எனக்கு புரியவில்லை", எனத் தனது விசனத்தைத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகள் நிறுவனம் ஒன்றினால் கொடுக்கப்பட்ட ஓர் சிறு குடிசையிலேயே தெரேஸம்மா-வும் அவருடைய இளைய மகளும் தங்கி வருகின்றனர் எனக் கூறினார். வீட்டுப் பத்திரங்கள் இல்லாத காரணத்தினால் ஓர் நிரந்தர வீடு தெரேஸம்மாவிற்கு கொடுக்கப்படமாட்டாது என ஐக்கிய நாடுகளின் அகதிகள் நிறுவனம் கூறியது. சகல உடமைகளும் பத்திரங்களும் சுனாமி பேரலையில் அடித்துச் சென்ற காரணத்தினால், அந்நிலத்திற்குத் தானே சொந்தக்காரி என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

தனிமையில் வாழும் ஓர் விதவைப் பெண்ணாக அவர் இன்னும் பல சிக்கல்களில் மாட்டிக் கொண்டுள்ளார். தெரேஸம்மாவிற்கு நிலம் கொடுக்கப்படாவிட்டாலும், இரண்டு குழந்தைகளுக்குத் தாயான அவரது மகளுக்கு ஒரு வீடு அரசாங்கத்தினால், சற்று உள் பக்கமாகவுள்ள வல்லிபுரத்தில் கொடுக்கப்பட்டது. இரண்டு ஏக்கர் நிலப்பரப்பை சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்க அரசாங்கம் ஓர் கொள்கையை ஊருவாக்கியுள்ளது என அவர் தெரிவித்தார். நான்கு அல்லது ஐந்து வீடுகளுக்கு ஒரு கிணறே காணப்படுகின்றது. தனக்கென ஓர் சொந்த வீடு அமைத்து, அவ்வீட்டில் தனது குழந்தைகளைப் பராமரித்து வளர்த்து வந்துள்ளார். விதவையாக சமூகத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளார் என அவர் எண்ணுகிறார். மேல் அதிகாரிகள் இதையிட்டு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்காத காரணத்தினால், தற்பொழுது ஒரு தனிப்பட்ட நபராக அவர் கருதப்பட்டு எவ்வித நிலத்திற்கும் சொந்தம் கொண்டாடாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தனது மகளுக்கு முன்னைய வீட்டை சீதனமாகக் கொடுத்ததால் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட இவ் வீடும் மகளுக்கே சொந்தமாகும் என்கின்றார்.

இவ்வுலகிற்கு பல உயிர்களைக் உருவாக்கிக் கொண்டு வருவதில் அவர் ஈடுபட்டு இருந்த பொழுதிலுங் கூட, தனது வீடழிந்து தற்பொழுது ஒரு குடிசையில் வாழ்வது கடவுள் தனக்களித்த தண்டனை என அவர் கூறுகிறார். ■

**சேபாலி கோட்டேகொட**
**ஜயந்தி குரு உத்தும்பால**


குறிப்பு: போர்ப் பிரதேசங்களில் மகப்பேற்று சுகாதாரம் பற்றிய ஆய்வுகளை நடத்தும் பொழுது டாக்டர். சேபாலி கோட்டேகொட நடாத்திய பேட்டியே இது. இப்பேட்டி பருத்தித்துறையிலிருக்கும் தெரேசம்மாவின் வீட்டில் 30 ஏப்ரல் 2005 அன்று நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணியா கவிதைகள்...

பெண்ணியா என்ற புனைபெயரில் கவிதை எழுதும் நஜிபா மட்டக்களப்பு காத்தான் குடியைச் சேர்ந்தவர். 1998 ஆம் ஆண்டிலிருந்து கவிதைகள் எழுதுபவர். இலங்கையில் பெண்கள் கவிதைத் துறையில் புதிய வீச்சுக்களை ஏற்படுத்தியுள்ளனர். 1980 களில் இருந்துபெண்கள் தமது கருத்துக்களையும், கேள்விகளையும், விமர்சனங்களையும், விருப்பங்களையும் வெளியிடும் சாதனமாகக் கவிதையைப் பயன்படுத்தியுள்ளனர். இலங்கையில் பெண்களின் கவிதைகள் என அடையாளம் சொல்லக் கூடிய ஒரு இலக்கிய ஆக்கமாக அதனை ஆக்கியுள்ளனர். இவ் வகையில் பெண்ணியாவின் கவிதைத் தொகுப்பு பெண்கள் கவிதைத் தொடர்பின் ஒரு பகுதியாக சமீபத்தில் வெளியாகியுள்ளது. இத் தொகுதியிலிருந்து மூன்று கவிதைகளை நன்றியுடன் பிரசுரிக்கின்றோம்.



### பச்சைக் கனவு

மலர்ந்து வாடிய பூக்களும்
தேய்ந்து மறைகின்ற நிலவும்
என் கவிதையாகின்றன.
என் நினைவுகள் பொய்த்துச் சுருங்கி
உணர்வுகள் நொருங்கிச் சிதையும்
இவ்வுலகந் தான் இன்றைய என் சோகம்
ஒரு யுகத்தில்
என் இப்போதைய சுவாசம் உண்மையெனில்
நான் பிறவியாகி தேய்ந்து போவது உண்மையெனில்
நான் சிரித்ததும் அன்றைய உண்மை

அது ஓர் சுகமான ஞாபகம்
என் உறவுகளும்
என் சினேகங்களும்
நானும்
அமைதியும் மகிழ்வுமாய்
அம் மண்ணில் வாழ்ந்திருந்தும்
அவனது குளிர் கரங்கள் பற்றி
என் கைவிரல்கள் சூடேறியதும்
அவனுடனான என் உணர்வுகள்
பனித்துாவியதும்...
நான் இதை முடிவு காலமென
அன்று உணரவும் இல்லை
ஏனெனில் அவை என் கனவுகளும் கூட.
மறைந்து போன என்
மணல் ஓவியங்களை
கீற முனைகின்றேன் நான்.

என்னுடைய அந்த நிமிடங்களை
நினைக்கும் என் இதயத்தை
அறுத்தெறிந்து வாழ நினைக்கும் நான்
இன்று எதைச் சிந்திப்பேன்...
தொலைந்து போன
என் சமாதானம் பற்றியதாகவா
அல்லது நான் தொலைத்து நிற்க்கும்
எல்லாவற்றையும் பற்றியதாகவா
எதைச் சிந்திக்க
என்முகம் கன்றிச் சிவக்க.
நான் தொலைத்தவற்றைத் தேடுகின்றேன்
என்னுள் கிளர்கின்ற வேகத்துடன்.

எதுவுமே வேண்டாம் இம்மண்ணில்
எங்களுடைய அவர்களும் அவைகளும் போதும்
மழை அடித்துக் கொட்ட

தெரு நாயும் நானும்
ஒதுங்கி நிற்கவும்
யாருடைய குறுக்கிடலுமற்று
என் பயணங்களில் நான் பயணிக்கவும்
மலர்களையும் தென்றலையும்
என் நண்பர்களாக ஆக்கவும்
என் தாயின் மடியைப்
படுக்கையாக்கவும்
ஓர் உலகம் வேண்டும் எனக்கு.

அங்கே இவ்விதயத்தைப் பிழிந்து
வடியும் கண்ணீர் இல்லை
என் கண்ணீரால் நனையும்
என் தலையணைகள் இல்லை
சகோதரர்களின் கழுத்துக்களை அறுத்தறுத்து
புதைத்து மூடும் குழிகள் எதுவுமில்லை
நாற் சுவருக்குள் நான்அடைபட்டு
கூக்குரலிடும் வேதனையில்லை

இன்றைய என் கனவுகளில்
ஒவ்வோர் உயிர்ப்பும்
எங்கோ ஒரு நாள் எங்கோ
உயிர்ப்படும் என்ற நம்பிக்கை
என்னுள் மிளிர்கின்றது
ஆயினும் அவற்றை முந்தியதான
போர்க் காலம் எல்லாவற்றையும் கொன்று தீர்த்தால்
இவை என்றுமே என் நிறைவுறா
கனவுகளாகத் தான் போய் விடுமா?
என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை

என் ஈர்ப்பு அறுகிறது
இப் பேய் உலகை விட்டும்
அதன் ஆதிக்கங்களை விட்டும்

பரந்து கிடந்தன என் உணர்ச்சிகள்
அவற்றையெல்லாம் முடக்கி வை என்றனர்
நான் அவாவியிருந்த வாழ்வையும்
என் சுதந்திரம் நுரைத்த கனவுகளையும்

ஒரு பெரும் கனவுலகைக் கட்டி
நான் பதினேழு வருடங்கள் ஆண்டேன்
எங்கிருந்தோ வீசிய புயலில்
எல்லாமே சிதறின
நொருங்கிச் சிதைந்த கனவுகளோடும்
கண்ணீரோடும்
ந:ன் துயிலறுத்திருக்கிறேன்

என் ஈர்ப்பு அறுகிறது
இப் பேய் உலகை விட்டும்
அதன் ஆதிக்கங்களை விட்டும்

நிரந்தரித்திருக்க நினைத்திருந்தேன்
என் யுகத்தில்
உய்த்துணர்கிறேன் இப்போ
சகலவிதமான யதார்த்தங்களையும்
மனித நேயங்களையும்
உண்டு கழித்து ஏப்பம் விட்டு
வீணுக்குச் சிரித்து
வாழ்வதே வாழ்வென ஆயிற்று...ஆயிற்று...

மனிதத்துவைத்தத் தொலைத்த
தகப்பன்களின் மகன்களினிடையே
எனக்கான
ஒரேயொரு காதலனையும் காண முடியவில்லை
எனவேயும்
என் ஈர்ப்பு அறுகிறது
இப் பேய் உலகை விட்டும்
அதன் ஆதிக்கங்களை விட்டும்

என் பயணம் ஆரம்பித்தாயிற்று
முடிவுகளற்ற இலக்கை நோக்கி
தனித்தாயினும் பயணிப்பதே இயன்றவரை
என் சிறகுகளின் மீது நீளும்
எல்லாக் கைகளுக் கெதிராகவும்
என் கனவுகளின் மீது
கொடூரங்களை வரைய நீளும்
எல்லாத் தூரிகைகளுக்கெதிராகவும்

## வதை படலம்

எப்போது
எனக்கும் என் தாய்க்கும்
என் சகோதரிக்கும்
உன் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை?
எத்தனை தடவைகள்
என்னுடன் என் தலையணை அழுதிருக்கும்.
இருட்டில் நான் விடுகிற
ஒவ்வொரு துளிக் கண்ணீரும்
உன்னை நோக்கி
என்னால் விடப்படுகின்ற சாபங்களாகவே இருக்கும்.

உனக்குத் தெரியுமா?
என் இதயத்தில்
எத்தனை கீறல்கள் இருக்கின்றன என்று?
நானும் ஒரு சராசரிப் பெண் என்பதை
எப்போதாயினும் நீ உணர்ந்ததுண்டா?
உன் வரண்டுபோன கௌரவத்திற்காய்
என்னையல்லவா நீ
கொன்று கொண்டிருக்கிறாய்
என்னைப் போன்றவர்கள்
எவ்வளவு இன்பமாய்
இன்னும் வாழ்ந்து கொண்டிருக்க
பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடும்
அபலையாகவே நான் இன்னும்...

உன்னுள் சிறிதளவேனும்
மனிதம் என்ற ஒன்றுள்ளதா?
அது இருந்திருந்தால்
இப்போது நான்
இக்கவிதையை எழுதியிருக்க மாட்டேனே!
என் மீது
சிறிதளவேனும் அன்பைக் காட்டாத
ஒரு காட்டு மிருகம் போலவே
இன்றுவரை நீ வாழ்ந்து கழித்தாய்.
உன் ஆதிக்கம் என்பது
என்னை
என் நாவை
அடக்கி ஆள்கின்றவரை மட்டுமே.

- நன்றி : பெண்ணியா கவிதைகள், 2006


அன்பான வாசக நெஞ்சங்களே
உங்கள் ஆக்கங்களை எமக்கு
அனுப்பி வையுங்கள்.

எமது முகவரி :
பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான
கூட்டமைப்பு,
174, அல்விஸ் அவனியூ, காசல் வீதி,
கொழும்பு - 08, இலங்கை.




தொலைபேசி - 00 94 115632045, 5635900
தொலைநகல் - 00 94 112690201
மின்அஞ்சல் - womedia@sltnet.lk அல்லது
options@sltnet.lk





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இடம் பெயர்ந்தோர் முகாம்களில்

# பெண்களின் பிரச்சினைகள்

மட்டக்களப்பில் மக்களின் இடப்பெயர்வு தொடர்பான பிரச்சினைகள் இருபது வருடங்களாகத் தொடர்ந்து வருகின்றன. போர் நிலைமைகள், வெள்ளம், சுனாமி, மீண்டும் தற்போது போர் ஆகியவற்றால் தொடர்ந்து இடப் பெயர்வுகள் நிகழ்ந்தன, நிகழ்கின்றன. இன்றைய நிலையில் சுமார் 72,000 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தினுள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இடம் பெயர்ந்தவர்கள் எனும் போது அது அவர்கள் தொடர்பில் ஒரு வழமை போலவும் உடனடித் தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்வதுமாகவும் காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. நிறுவனங்கள் சமைத்த உணவும், உலர் உணவுகளும் வழங்கிய வண்ணம் இருக்கின்றன. அரசு அவர்களுக்கான பங்கீட்டு அட்டை மூலம் பொருட்களை வழங்குகின்றது. மக்களும் இன்னும் இரண்டொரு நாளில் தத்தமது இடங்களுக்குப் போகலாம் எனும் கனவில் பாடசாலைகளிலும் நலன்புரி நிலையங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். எனினும் சாப்பாடுகள், மருந்து வகைகள், மலசல கூட வசதிகள் மற்றும் பொழுது போக்கு விடயங்கள் என்பன உடனடியாகத் தேவைப்பாடுடைய விடயமாகவும் கவனத்தில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றமை வரவேற்கப்பட வேண்டியது.

ஆனாலும் பிரச்சினை ஒன்றுள்ளது. பெண்களின் பிரத்தியோகத் தேவைகள் மற்றும் பெண்களின் வாழ்வு நிலமைகளையும் கருத்தில் கொள்ளப்படாது இவ் அவசர காலத் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. பலவிதமான இன்னல்கள், பிரச்சனைகளுக்குப் பெண்கள் நாளாந்தம் முகம் கொடுத்துக் கொண்டு முகாம்களில் வாழ்கின்றனர். மறுபுறத்தில் இவற்றையெல்லாம் இந்த மாதிரி நெருக்கடியான நேரங்களில் அனுசரித்தும் சகித்தும் போக வேண்டும் எனும் கருத்தும் பல பேர் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கப்பட்டும் வருகின்றது. ஆனால் பெண்களும் பெண் சிறுமிகளும் படும் துயரமும் வேதனைகளும் கவனத்தில் எடுக்கப்படுகின்றதா? என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

சில உண்மைச் சம்பவங்களை இங்கு சுட்டிக்காட்டுவதன் மூலமாக அவர்களின் கஸ்ட நிலைமையை வெளிப்படுத்துவதுடன் மனித நேய ஆர்வலர்களின் பார்வையையும் திருப்ப விரும்புகிறேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில நலன்புரி நிலயங்களில் பெண்களுக்கான மறைவிடங்கள் மிகவும் குறைவு. அவர்களுக்கு மறைவான அறைகள் கிடையாது, அவர்களின் பிரத்தியோகத் தேவைகளை மேற் கொள்வதற்க்கு தனியான இட வசதி இல்லை. சுனாமி நலன் புரி நிலையங்களில் ஆரம்பத்தில் பொதுவான தேவைகள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டது. உதாரணமாக தண்ணீர், மலசல கூட வசதிகள் என்பன உடனுக்குடன் நிறுவனங்களினால் செய்து கொடுக்கப்பட்டன. ஆனால் பெண்கள் குளிப்பதற்க்கு பொருத்தமான மறைவிடங்கள் இல்லை.

பின்னர் பெண்கள் நிறுவனங்கள் இவற்றை அவதானித்து குளிக்கும் இடங்களில் மறைவிடங்களை அமைத்துக் கொடுக்கும் படி பரிந்துரைகள் செய்தன. சில நிறுவனங்கள் தாமாகவே அமைத்துக் கொடுத்தன.

இன்று யுத்தம் காரணமாக இடப்பெயர்வுகள் தொடர்ந்த போது மக்கள் அதே கஸ்ட நிலையை நலன்புரி நிலயங்களில் எதிர் நோக்கிய போது தற்போது சேவை வழங்கும் நிறுவனங்கள் இவற்றைக் கருத்தில் எடுத்து மறைவிடங்களை அமைத்துக் கொடுத்துள்ளன. குளிப்பதற்க்கும் மலசல கூடங்களைப் பாவிப்பதற்க்கும் வெவ்வேறிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண் பெண் என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனாலும் பெண்களும் பெண் சிறுமிகளும் தமது ஆடைகளை மாற்றுவதற்கும் மற்றும் சிறு குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டவும் எது விதமான மறைவிடங்களும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அவர்களின் பிரத்தியோகத் தேவைகளை மேற் கொள்வதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

ஒரு நலன்புரி நிலயத்தில் பெண்களது மலசல கூடத்திற்கு அருகாமையில் கைப்பந்தாட்ட விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பெண்கள், பெண் சிறுமிகள் மலசல கூடத்தைப் பாவிப்பது அசௌகரியமானது. விளையாடுவதற்கான மைதானம் தேவையென்று யோசித்தவர்கள் மலசல கூடம் தொடர்பாகவும் அதனைப் பாவிப்பவர்கள் தெடர்பாகவும் சிந்திக்கத் தவறி விட்டனர். அந்த நலன்புரி நிலயத்திற்க்குச் சென்ற பெண் தொண்டர்களிடம் பெண்கள் தமக்கு இருக்கும் இவ் இக்கட்டான நிலையை விளக்கிக் கூறினர். கூட்டமாகவும் தனி நபராகவும் பல விமர்சனங்களை வெளியிட்டனர்.

இவ்வாறான விமர்சனங்கள் வரும் போது இப்படியான அவசரகாலத்தில் இவற்றிற்கெல்லாம் வெட்கப்படக் கூடாது, இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு வாழ வேண்டும்" என்ற கருத்து ஆண்களினாலேயே பரவலாக முன் வைக்கப்படுகின்றது. மறு புறத்தில் பெண்கள் இப்படித் தான் நடக்க வேண்டும், இப்படித்தான் கட்டுப்பட்டு அடக்க ஒடுக்கமாக வாழ வேண்டும் என சொல்லிக் கொடுத்த இவர்கள் இன்றைய சூழ்நிலையில் மாற்றங்களையும் வலுக்கட்டாயமாகத் திணிக்கின்றனர். பெண்கள் காலம் காலமாகக் கலாசாரக் கட்டுக்குள்ளாகி வாழ்ந்த வாழ்க்கையை இன்று எல்லோர் முன்னிலையிலும் பொதுவான ஒரு இடத்திலும்,திறந்த வெளியிலும் வாழ் என வற்புறுத்துவது பாரிய உரிமை மீறலாகும். ஆண்கள் ஆதிக்கத்தின் மூலமாக பல கடடுப்பாடுகள், பழக்கவழக்கங்கள் பெண்களுக்கு ஊட்டப்பட்டு வந்திருக்கும் நிலையில் மாற்றங்களையும் பிறிதொரு அடக்கு முறை வடிவமாகத்தான் நோக்க வேண்டியுள்ளது.

**மட்டக்களப்பில் மக்களின் இடப்பெயர்வு தொடர்பான பிரச்சினைகள் இருபது வருடங்களாகத் தொடர்ந்து வருகின்றன. போர் நிலைமைகள், வெள்ளம், சுனாமி, மீண்டும் தற்போது போர் ஆகியவற்றால் தெடர்ந்து இடப் பெயர்வுகள் நிகழ்ந்தன, நிகழ்கின்றன.**

இவ்வாறான பொது இடங்களிலும் சன நெருக்கடியான சூழலிலும் ஒரு பெண் ஒரு ஆணின் அருகில் நின்றால் குற்றம், ஆணுடன் பேசினால் குற்றம், ஆண்களுடன் சேர்ந்து பொது வேலைகளில் ஈடுபட்டால் குற்றம் என சமூகக் கணிப்பீடுகளை நீட்டிக் கொண்டு போகலாம். பெண்களைச் சந்தேகக் கண்களால் பார்ப்பது வழமையாகி விட்டது. அப் பெண் திருமணமானவராக இருந்தால் நாளாந்தம் அவளது கணவனால் விளையும் துன்பம், வேதனை சொல்ல முடியாது.

இவற்றுக்கப்பால் நாளாந்தம் குடும்ப வன்முறையில் பாதிக்கப்படும் பெண்கள் எத்தனை பேர் இந்த நலன் புரி நிலயங்களில் உள்ளனர்? அது மாத்திரமன்றி திருமணமான பெண்கள் கணவனின் பாலியல்த் தேவைகளுக்காக பாலியல் வல்லுறவுகளை அனுபவித்து வருகின்றனர். சிறுமிகள் படிப்பு இன்றி வயதுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீறியதான செயற்பாடுகளிலும் கவனச்சிதைவு அம்சங்களிலும் ஈடுபாடு காட்டுகின்றனர். இது இளவயதுத் திருமணங்களுக்குக் காரணமாகின்றது.

நலன்புரி நிலையங்களில் உள்ள ஆண்கள் வேலை வாய்ப்பு எதுவுமின்றி தமது பெரும்பாலான நேரத்தை பொழுது போக்கு நிகழ்வுகளில் காலம் தள்ளும் அதே வேளை பெண்கள் இயந்திரமாக இந்த நலன் புரி நிலயங்களில் பல இன்னல்களையும் தாண்டி தமது அன்றாட வேலைகளைச் செய்து வருகின்றனர். பெரும்பாலாக ஓய்வாக இருக்கும் கணவன்மார் தம் மனைவிக்கு எந்த விதத்திலும் உதவி செய்யாமல் மனைவிமாரையும் சிறுமிகளையும் விமர்சித்த வண்ணமும் தொந்தரவு கொடுத்த வண்ணமும் உள்ளனர். அத்தோடு அந்தந்த நலன் புரி நிலையங்களில் உள்ளவர்கள் தான் சுத்தம் செய்து சுகாதாரத்தைப் பேண வேண்டும் என்ற நடை முறை உள்ளது. ஆனால் ஆண்கள் வெட்டிப் பேச்சுக்களிலும் சூது விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதுமாக உள்ளனர். இங்கு நிறுவனங்கள் தங்கள் தொண்டர்கள் மூலம் மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குகின்றன. அதே போன்று அரசும் தமது முகவர்களான கிராம உத்தியோகத்தர்கள் மூலம் சேவைகளைச் செய்கின்றது. ஆனால் எது விதமான பொறுப்பும் எடுத்துக் கொள்ளாமல் பல ஆண்கள் பொழுதைக் கழிக்கின்றனர். இது தொடர்பிலும் விழிப்புணர்வு ஊட்டப்படுவது அவசியமாகின்றது.

முகாம்களில் உள்ள ஆண்களை நிறுவனங்களோ, அரசோ தங்களது சேவைகளை வழங்குவதற்கும் வேலைகளை இலகுபடுத்துவதற்கும் பயன்படுத்த முயற்ச்சிக்கலாம். அத்துடன் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கும் இவர்களின் மன நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு வேலையில்லாத நண்பர்களுக்கு வேலைகளைக் கொடுத்து அவர்களின் மன வலிகளை நீக்குவதற்கு வழிவகுக்கலாம். அதாவது இருக்கும் இடத்தை துப்பரவு செய்தல், மரங்களை நட்டுப்பராமரித்தல் போன்ற வேலைகளைக் கொடுத்து அவர்களின் கவனத்திலும் மனநிலையிலும் அமைதியை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் ஆண்களை அவர்களது பாதிப்புள்ளாகிய நினைப்பில் இருந்து மீட்டெடுக்க முடியும். அத்தோடு அவர்களது பொறுப்புக்களில் இருந்து விலகமுடியாதவர்களாகவும், பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்களாகவும் இவர்களை மாற்றமடையச் செய்யலாம்.

உதாரணமாக இன்றைய நிலையில் நலன் புரி நிலையங்களில் கிராம சேவகர்கள் மிகவும் வேலைப்பளுவுக்குள்ளாகும் நிலை காணப்படுகின்றது. கிராம சேவகர்கள் தமது தற்துணிவில் தமது வேலைப்பழுவைக் குறைப்பதற்க்கும், வேலையைத் திட்டமிட்டு சரியான முறையில் செம்மையாகச் செய்வதற்கும் நலன் புரி நிலையங்களில் உள்ள படித்த ஒரு சிலரை உதவி செய்து தரும்படி கேட்டு தமது வேலைகளைச் செய்கின்றனர். ஆனால் இன்று வரை அரசினால் கிராம சேவையாளர்களின் வேலைப் பழுவைக் குறைப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அரசு கிராம உத்தியோகத்தர்களுக்கு ஒரு உதவியாளரை நியமித்து பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். இது போன்று பல வேலை வாய்ப்புக்களுக்கு இது ஒரு உதாரணமாகவே இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது.

அரசாங்கத்தின் உயர்மட்டத் தீர்மானங்களை எடுக்கும் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு அமுல்படுத்தும் உத்தியோகத்தர்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் மேற் குறித்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு தங்களது சேவைகளை வினைத்திறன் உள்ளதாக மாற்றுவதுடன் மேலதிக மாற்றத்துக்குள்ளாக வேண்டிய விடயங்களை பால் நிலைக் கூருணர்வுடன் அரசுக்குப் பரிந்துரை செய்ய நடவடிக்கை எடுத்து தொண்டு நிறுவனங்களும் அரச துறையும் ஒன்றிணைந்து மக்களுக்கான ஓர் நல்ல சேவையை வழங்க முடியும். ■

**எஸ். ரேணுகா ராணி**

**புகைப்படங்கள் : சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய் வீசும் உளறலும்





சில நாட்களாக வேறெதையும் நினைக்க இடம்தராத வேலைப்பழுவில் இருந்து விடுபட்ட பின்னர் எனது நட்பு வட்டாரத்தில் இருந்து விடுபட்டு விட்டேனோ என ஐயுறும் போது அல்லது எனது வாழ்க்கை எங்கே சென்று கொண்டிருக்கிறது? என்ற எனது வாழ்க்கை பற்றிய ஒரு கேள்வியை அலசி ஆராய வேண்டிய தேவையை உணரும் போது எனது நண்பர்களுடன் சேர்ந்து கோப்பி அருந்தப் போனேன். கோப்பி அருந்தும் போது அரட்டை அடிப்பது எனது ஆதங்கங்களில் பலவற்றை ஆசுவாசப்படுத்திவிடும் - ஆன்மாவுக்கான ஊக்க பானம்.

இந்த நாட்களில் சிக்கலே இந்தக் கோப்பியும் அரட்டையும் தான். இதைப் பாருங்கள்: குறிப்பிட்ட கோப்பி அருந்தகத்துக்குச் சென்று எனது நண்பி "சாமை" நான் காண்கின்றேன், அவள் எனக்காக காத்துக் கொண்டிருக்கிறாள் எனக் கொள்வோம். அப்படியும் கொள்ள முடியாது, ஏனெனில் அவள் தன்னுடைய கையடக்கத் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருக்கிறாள். எனக்கு ஒரு ஹாய் சொல்கின்றாள். அவள் கதைத்து முடிக்கும் வரைக்கும் நான் அமர்ந்து இருக்கின்றேன். கொஞ்சம் நேரமாகிக் கொண்டு செல்கிறது. அவளுடைய அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒரு பணியாள் குறித்த ஒரு நிகழ்ச்சி நிகழ இருக்கும் இடம் மாற்றப்பட வேண்டிய விடயத்தைக் கையாள முடியாமல் திணற சாம் அவருக்கு உதவ வேண்டியிருக்கிறது. நான் உணவு அட்டையை (மெனு) பாரக்கின்றேன். அலுப்பாக இருக்கவே எனது தொலைபேசியை வெளியே எடுக்கிறேன். கொஞ்ச நேரம் இருக்கிறபடியால் அமெரிக்காவில் உள்ள எனது சகோதரனுக்கு அவனது பரீட்சை எப்படிப் போகிறது எனக் கேட்டு எஸ்.எம்.எஸ் அனுப்பத் தீர்மானிக்கின்றேன். அவன் உடனே தான் இரு நாட்களாகத் தூங்கவில்லை என்றும் எப்போது கடைசியாகக் குளித்தான் என ஞாபகமில்லை என்றும் பதில் அனுப்பினான். சாம் தொலை பேசியை அணைக்கிறாள், நான் செய்தியை அனுப்பிக் கொண்டிருக்கிறேன். "எனது சகோதரன் மிகவும் சோர்வாக உள்ளான் ...பரீட்சை நடந்து கொண்டிருக்கிறது" எனக் கூறிக் கொண்டே "மயங்கி விழ முன்னர் சற்றுத் தூங்க வேண்டும்" என அவனுக்குப் பதில் அனுப்புகிறேன். "அப்போ அவனது கல்லூரியில் எப்படி சமாளிக்கிறான்?" என சாம் கேட்கிறாள். நான் பதில் கூற முன்னர் அவள் தொலை பேசியில் செய்தி கிணு கிணுக்கிறது. "சொனாலியாக இருக்க வேண்டும் - இன்று கொஞ்சம் பிந்தி விடும் எனச் சொன்னவள்" சாம் கூறிக் கொண்டே செய்தியை வாசிக்கின்றாள். "வந்து கொண்டிருக்கிறாள் - அவளது உத்தியோகம் வேலைப்பழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்தது. ஏதோ வேலையை முடிக்க வேணும் என்று திரும்பிச் செல்ல வேண்டும் என்று கொஞ்சம் குழம்பிப் போய் இருக்கிறாள்." "கவலைப்பட வேண்டாம் ஒரு மணித்தியாலம் என்றாலும் வந்திட்டுப் போ" சாம் திரும்பச் செய்தி அனுப்புகிறாள். "அவளுடைய வேலை நேரம் பற்றி அவளுடன் கொஞ்சம் கதைக்க வேண்டும்." என நான் கூறுகின்றேன். இன்னுமொரு செய்தி சொனாலி: "பத்து நிமிடங்களில் வந்து விடுவேன்." எனது "சகோதரன் பத்துப் பேப்பர் எழுத வேணும். வார இறுதியில் தான் நித்திரை கொள்ளலாம். குழந்தை எப்படி இருக்கிறது?" "ஆம் நாம் அவளுடன் கதைக்க வேண்டும்" எனக் கூறிக் கொண்டு " சரி விரைவில் சந்திப்போம்" செய்தி அனுப்புகிறாள் சாம். " அவள் வேலையிலேயே ஊறிக்கிடக்கிறாள். வேலை மட்டும் என்றில்லை" எனக் கூறிய சாம் கடைசியாக உணவு அட்டையை எடுக்கிறாள். குழந்தை எப்படி உள்ளது என்ற கேள்விக்கு எப்படிச் சும்மா பதில் அனுப்புவது என யோசித்துக் கொண்டே" எனது சகோதரனுக்கு பைத்தியம்" என சாமிடம் கூறுகின்றேன். "ஈமெயில் அனுப்புகின்றேன்" என பதில் அனுப்புகின்றேன். உடனே இன்னுமொரு செய்தி "வேலை முடிந்ததும் வந்து ஏற்றிக் கொண்டு வீட்டில் விட வேண்டுமா?" என எனது சகோதரனின் மனைவி கேட்கிறாள். அதற்குப் பதில் அனுப்பிய வண்ணம் "அவள் உண்மையிலேயே உதவியாக இருக்கிறாள்" எனக் கூற "யார்?" எனக் கேட்கிறாள் சாம். "எனது மச்சாள்" என்கிறேன் நான். "கொஞ்ச நாளாக ஆழமான ஒரு நட்பிலே ஊறிக்கிடக்கிறேன்" என சாமிடம் நான் கூறுகிறேன். "உண்மையாகவா? யார் அது?" அவளுக்கு அதைச் சொல்ல முனைய சொனாலி வந்து சேர்கிறாள். "மன்னிச்சுக் கொள்ளுங்கோப்பா; ஒரு வெளியீடு செய்கிறம் கழிப்பறைக்குப் போவது என்றாலும் என் மேசையை விட்டு விலக முடியாமல் இருக்கிறன்." அவனது தொலை பேசி அடிக்கிறது. "ஆம் ஜானக மூக்குக் கண்ணாடி கொடுத்தாயிற்று. சொல்லுங்கோ..." கொஞ்சம் சிடுசிடுத்தபடியே தனது உதவியாளரிடம் கதைக்கிறாள். நாங்கள் கேட்டுக் கொண்டு எப்பிடித்தான் இந்த ஆளைச் சமாளிக்கிறாளோ என்று நம்ப முடியாமல் தலையை உலுப்பிக் கொள்கிறோம்.

இப்படியான ஒரு நிகழ்ச்சிக்குப் பின்னர் நிலை தளர்ந்து போயி ருப்பதாகவே நான் அடிக்கடி உணர்கிறேன். அதாவது கதிரை மேசையிலே முகம் என்றில்லாமல் கண், வாய்,காது எனத் தனி தனியாக உடைந்து போயிருக்கும் ஓவியம் போல காணப்படுவதாகவே உணர்கிறேன். எமது அசைவுகள் எல்லாமே எஸ்.எம்.எஸ் மற்றும் தொலைபேசி அழைப்புக்களால் பாரதூரமாக அமுக்கப்பட்டுள்ளன போல் காணப்படுகின்றன. ஒரு கணத்தை முழுமையாக ஒருவர் தன்னும் வாழுவதில்லை. அல்லது யார் எமக்கு முன்னால் அமர்ந்திருக்கிறார் என்றோ என்ன உள்ளது என்றோ கவனம் செலுத்துவதில்லை. பெரும்பாலான நேரங்களில் ஒன்றுக்கும் அதிகமான விடயங்களில் நாம் கவனம் செலுத்துகின்றோம். இப் பல்முனைத் தொடர் பாடல்கள் நாம் பலருடன் தொடர்பு படுவதாகக் காட்டினாலும் கூட அவர்களிடமிருந்து முறித்தே தான் வைத்திருக்கின்றன.

**பலருடன் தொடர்பாடக் கூடிய எமது வசதியானது யாருடனுமே தொடர்பில்லாமல் இருப்பதிலே கொண்டு விட்டுள்ளது.**

நான் தொழில் நுட்பத்தைச் சாட முனையவில்லை. அல்லது முன்பு நாம் ஒருவரோடு ஒருவர் கதைக்க நேரம் இருந்தது. சந்தோசமாக இருந்தோம் என்றெல்லாம் கூறவுமில்லை. ஆனால் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனக் கூற முனைகின்றேன்.

தொழில்நுட்பமானது வகை சார்ந்ததாகக் காணப்படுகின்றது. அத்துடன் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் முக்கியமானவை. ஏனெனில் இவை நாம் மண்டை வெடிக்கும் வகையில் செய்து முடிக்கும் பணிகளிலும் நேரத்தை விரயமாக்கும் செயற்பாடுகளிலும் நாம் செலவழிக்கும் காலத்தைக் குறைத்துக் கொள்ளும் முக்கியமான காரணியாகக் கொள்ளப்படுகின்றன. சலவை இயந்திரம் தனது தொழிலைச் செய்வதனால் எமது ஓய்வு நேரம் அதிகரித்துக் காணப்படுகின்றது. மூன்று வாரங்களாக காத்திருந்து தபால் மூலம் தொடர்பு கொள்ளாமல் சுடச்சுட ஈ-மெயில் மூலம் தொடர்பாடுவதனால் உறவினர்களிடமும் அதிக நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவழிக்க முடிகின்றது. முக்கியமான விடயங்களில் அதிக கவனம் செலுத்த உதவுவதற்கு என்றே தொழில் நுட்பம் கருதப்பட்டது. ஆனாலும் அது எம்மை அடிமைகளாக்கி எமது வாழ்க்கையின் முதன்மையான விடயங்கள் எவை என்ற குழப்பத்தையே உண்டு பண்ணியுள்ளன என எனக்குப்படுகின்றது.

உங்கள் கையடக்கத் தொலை பேசி கிணு கிணுக்கும் போது உடனே உங்களது நடவடிக்கை எப்படி இருக்கும் எனப் பாருங்கள். நீங்கள் எதிலாவது ஈடுபட்டு இருப்பீர்கள், ஆனாலும் உடனே அதனை நிறுத்தி விட்டு தொலைபேசியை எடுத்துக் கதைக்கவே விழைவீர்கள். அல்லது அது அவசரமான அழைப்பாக இருக்கலாம் என தொலைபேசியின் இலக்கத்தை அவதானிப்பீர்கள். ஆனால் "அவசரம்" "முக்கியம்" மற்றும் "சாதாரணம்" ஆகியவற்றிற்கு இடையிலான நுட்ப வேறுபாடானது வர வர சிக்கலாகிக் கொண்டு செல்கின்றது. உண்மையில் தொலைபேசி அழைப்பதே அவசரம்தான் என்பது போலவே காணப்படுகிறது. ஆகவே என்ன செய்து கொண்டிருந்தாலும் காரியமில்லை. தொலைபேசி கிணு கிணுத்தால் கதைக்கிறோம். ஆனால் நீங்கள் உங்கள் குழந்தையுடன் காலை உணவு உண்ணுகின்ற வேளையில் வருகின்ற தொலைபேசி அழைப்பு அவசரமானதா? சக ஊழியருடன் வேலை தொடர்பாகக் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போது நண்பர் ஒருவரிடம் இருந்து வருகின்ற எஸ்.எம்.எஸ் முக்கியமானதா? கூட்டம் ஒன்றில் பங்கு பற்றிக் கொண்டிருக்கும் போது செய்தி அனுப்பியும் வாசித்தும் கொண்டிருப்பது சாதாரணமானதா?

குறிப்பிட்ட நிகழ்ச்சிகளின் போது கையடக்கத் தொலைபேசியை "சாதாரண" நிலையில் (Normal Mode) வைத்திருப்பது பண்பில்லை எனக் கொள்ளும் அளவிற்கு தொலைபேசிக் கலாச்சாரம் வளர்ந்துள்ளது. கூட்டம் ஒன்றிலே அல்லது திரைப்படம் பார்க்கும் போது பல்வேறு அழைப்பு ஒலிகள் கிணுகிணுத்துக் குழப்பும் போது அதன் உரிமையாளர்களை நோக்கி நம்மில் பலர் புருவம் தூக்கி பார்த்துக் கொள்கிறோம். ஆனால் நண்பர்களுடன் அல்லது சக ஊழியர்களுடன் கதைக்கும் போது அல்லது கூட்டம் அல்லது ஒரு விரிவுரையின் போது செய்தி அனுப்புவதை நாகரீக மற்ற செயலாக கணிப்பதில்லை. What to expect –The Toddler Years (என்ன எதிர்பார்ப்பது – தளர் நடைப் பருவம்) என்ற நூலின் அடிப்படையில் தளர் நடை பயிலும் குழந்தையின் வாழ்வில் முக்கிய விருத்தியான கற்பனை விருத்தி விளையாட்டிலே ஈடுபட்ட எனது மகனை (14 மாதங்கள்) அவதானித்துக் கொண்டிருக்கும் போது எனது வாழ்விலே கையடக்கத் தொலைபேசி பங்கு கொள்ளும் மையப்பாகத்தை நான் நினைவு கூர்ந்து கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஒரு சிறிய பிளாஸ்ரிக் தொலைபேசியை – விளையாட்டுப் பொருள் ஒன்றின் பகுதி – விருப்பமாக எடுத்துக் கொண்டான். அதனை ஆராய்வதிலேயே குறிப்பிடத்தக்க அளவு நேரத்தை செலவழித்தான் எனது மகன். முதலிலே அப்படியே பிரமித்துப் போய் விட்டேன். பின்னர் யாருடன் கதைக்கிறான் எனக் கேட்டபடி நானும் அவனது விளையாட்டிலே ஈடுபட முனைந்தேன். பதிலே கிடைக்கவில்லை,நான் விளையாட்டிலும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. என்னைக் கண்டு கொள்ளாமல் இன்னும் மும்முரமாகத் தொலைபேசியுடன் ஐக்கியமாகி, ஒரு அறையில் இருந்து இன்னொரு அறைக்கு நடந்தபடி, நான் நினைக்கிறேன் தொலைபேசி அழைப்பின் முக்கியத்துவத்தை சிறப்பிக்க விளைந்தான். அவனது கூத்துக்கள் பொம்மைகளுக்குத் தேனீர் தயாரிப்பது மற்றும் மூலைக் கடைக்குச் சைக்கிலில் போய் பாண் வாங்குவது என விரிவடைந்த போதும் தொலைபேசி மயக்கம் தெளிந்து விடவில்லை.

ஆகவே ஏன் நமது தொலைபேசிகளை அணைத்து வைக்கக் கூடாது? செய்தி பரிமாற்றப்படாமல் விட்டாலோ அழைப்பினை எடுக்காமல் விட்டாலோ எமது உலகம் அழிந்து போய் விடும் என நாம் அஞ்சுகிறோமா? அல்லது நாம் உயிர் துறந்து விடுவோம் என அஞ்சுகிறோமா?

நாம் வாழும் தொடர்பாடல் யுகத்தின் மையம் கையடக்கத் தொலைபேசிகள் ஆகும். முன்னர் சாத்தியப்படாத வகைகளிலே மக்களோடு கதைக்க அவை உதவுகின்றன. நேரம், இடம் முதலியன சிக்கல்களைத் தீர்த்து வைக்கின்றன. தொடர்பாடலானது மனிதனை ஒன்றுபடுத்துகின்றது. ஏனெனில் தொடர்பாடல் ஊடாகத்தான் நாம் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்கிறோம். ஆயினும் தொலை பேசி தொடர்ந்து கிணு கிணுத்தபடி இருந்தால் ஒற்றுமைப்படுத்துவதை விட சிதறிப்போய் விடுவோம் என உணரத்தலைப்பட வைக்கிறது கையடக்கத் தொலைபேசி. மனிதனைக் கடந்து பெரிய அளவில் தொழில் நுட்பத்தை நாம் போற்றி வருகின்றோம். அதாவது மற்றவரை விட கையடக்கத் தொலைபேசியிலேயே அதிக கவனம் செலுத்துகின்றோம் போலக் காணப்படுகின்றது.

பலருடன் தொடர்பாடக் கூடிய எமது வசதியானது யாருடனுமே தொடர்பில்லாமல் இருப்பதிலே கொண்டு விட்டுள்ளது.■


ஆஸா வென்-டோட் அபேசேகர

மொழிபெயர்ப்பு - அம்பிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் சமாதானத்தை வலியுறுத்துகின்றனர்!



**யுத்த நிலை மீண்டும் தலைதூக்கியுள்ளது. கடந்த பல காலமாக இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் மக்கள் தாம் இடம்பெயர்ந்த இடங்களிலிருந்து மீண்டும் இடம்பெயர்தல், குண்டு வெடிப்புகள், காணாமல் போதல்கள், இடத்திற்கிடம் காணக் கிடைக்கும் அடையாளங் காணப்படாத சடலங்களின் அதிகரிப்பு, இலங்கை முழுவதும் சமூகத்தின் பாதுகாப்பற்ற தன்மை முதலியன நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. ஒருபுறம், இத்தகைய சம்பவங்கள் சங்கிலித் தொடராக இடம்பெற்று வருகின்றன. அரசாங்கத்திற்கும் த.ஈ.வி.பு இயக்கத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் பாரதூரமான விதத்தில் மீறப்பட்டு, ஓர் அசல் யுத்த நிலைவரத்தை நோக்கி எமது நாட்டை இட்டுச் சென்றுள்ளது. மறுபுறம், "யுத்தம் அல்ல சமாதானம்" எனக் கூறும் ஒரு தரப்பினரால் அரசாங்கத்திற்கும் த.ஈ.வி.பு இயக்கத்திற்கும் அழுத்தங் கொடுக்கப்பட்டு வருகின்றது.**

கடந்த காலத்தில் சமாதானத்திற்காகச் செயலாற்றிய அரச சார்பற்ற அமைப்புகள் பலவும் சமாதானத்திற்காகப் பணியாற்றச் சென்றதன் மூலம் பெற்ற அனுபவங்கள் ஏராளம். அதேபோல், ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு சமாதான நிகழ்ச்சித் திட்டங்களுக்குமான மக்களின் பதிற் குறிகாட்டிகளும் பலதரப்பட்டவை. 2006 ஆம் ஆண்டானது நீண்ட ஒரு காலத்தின் பின்னர் சமாதான நிகழ்ச்சித் திட்டங்கள் பாரிய அளவில் ஏற்பாடாகிய ஓர் ஆண்டு எனக் குறிப்பிடலாம். அரசாங்கத்திற்கும் எல்ரீரீஈ இயக்கத்திற்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அழுத்தத்தைப் பிரயோகித்து, பெரும்பாலான அரச சார்பற்ற அமைப்புகளாலும் நாடு தழுவிய நிகழ்ச்சித்திட்டங்கள் பலவும் முடுக்கிவிடப்பட்டமை அதற்குரிய காரணமாகும்.

கடந்த காலத்தில் எமது நாட்டில் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் கட்டிக் காப்பதற்காக பெண்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொடுக்க அரச சார்பற்ற பெண்கள் அமைப்புகளின் வலையமைப்பொன்றாக "சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கைப் பெண்கள்" (Sri Lankan Women for Peace and Democracy - SLWPD) எனும் அமைப்பு முயன்றுள்ளது. தற்போது நாட்டில் உருவெடுத்துள்ள நிலைவரத்தின் மத்தியில் அரசாங்கத்திற்கும் எல்ரீரீஈ இயக்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு கோரி SLWPD எனும் இந்த வலையமைப்பு கடந்த ஆண்டில் உருவாக்கப்பட்டது. பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பின் தலையாய ஈடுபாட்டுடன் அரச சார்பற்ற பெண்கள் அமைப்புகளுடன், கன்னியாஸ்திரிகள், பிக்குணிமார்கள் ஆகியோரை உள்ளடக்கிய இந்த வலையமைப்பினால் 2006 ஆம் ஆண்டு முழுவதும் சமாதானத்திற்கான செயற்பாடுகளுடன், அழுத்தங் கொடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும், வீதி ஊர்வலங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. உலக சமாதான தினத்தைக் குறிக்கும்முகமாக விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அத்தகைய சமாதான நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடராக ஏற்பாடுசெய்த SLWPD அமைப்பின் சமாதானச் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்ளும் பொருட்டு இங்கு விபரங்கள் தரப்பட்டுள்ளன.

டிசம்பர் 2005ல், சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கை பெண்கள் அமைப்பு "மரணம் வேண்டாம்; வாழ்வு வேண்டும்", "போர் வேண்டாம்; சமாதானம் வேண்டும்" என்ற தலைப்பில் ஓர் சமாதான பேரணியை ஆரம்பித்தது. இதன் மூலமாக இலங்கை அரசாங்கத்தினையும் விடுதலைப் புலிகள் அமைப்பினையும் சமாதான பேச்சு வார்த்தைகளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து, அதிகரித்து கொண்டு வரும் வன்முறைகளையும் போர் நிறுத்த உடன்படிக்கை மீறல்களையும் முடிவுக்கு கொண்டு வருமாறு கோரியது. அன்று தொடக்கம் ஒவ்வொரு மாதமும் சமாதானப் பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன. பல்வேறு மாவட்டங்களிலுமிருந்து பெண்கள் கொழும்பு லிப்டன் சுற்று வட்டாரத்தில் ஒன்று கூடி "வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வா", "படுகொலைகளை முடிவுக்கு கொண்டு வா", "போரினை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்திற்கு திரும்பு" என்ற ஒரே கோரிக்கையை முன்வைத்துக் குரல் எழுப்பினர்.

### ஜனவரி 23, 2006

ஜனவரி 23, 2006 அன்று சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கைப் பெண்கள் அமைப்பு அதனுடைய இரண்டாவது சமாதான அமைதிப் போராட்ட பிரசாரத்தை நோர்வே சமாதான பிரதிநிதி எரிக் சொல்ஹேய்ம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அதே நாளிலேயே வவுனியா நகரத்தில் நடாத்த ஒழுங்கு செய்தது. எனினும் அடம்பனில் சனிக்கிழமை 21 அன்று நடைபெற்ற இருதரப்பினருக்குமிடையிலான கடும் மோதல் காரணமாக பாதுகாப்பு கருதி சமாதான பிரசாரத்தினை மீண்டும் லிப்டன் சுற்று வட்டாரத்திலேயே வைக்க நேரிட்டது. குருநாகல், புத்தளம், கண்டி, பொலநறுவை, மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து 300க்கும் மேற்பட்ட பெண்கள் விஹாரமகாதேவி பூங்காவில் ஒன்றுகூடி இலங்கை அரசாங்கத்தினையும் விடுதலைப் புலிகள் அமைப்பினையும் சமாதான பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து போர் நிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்தக் கோரி லிப்டன் சுற்று வட்டாரத்தை நோக்கி சமாதானத்திற்கான அமைதிப் பேரணியில் சென்றனர்.


இச் சமாதான பிரசாரத்தின் பொழுது புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த பெண்கள் அமைப்பான சமுதாய ஊக்க ஸ்தாபனம் (பிராஜ திரிய பதனம) சமாதான ஊதாவில் சடங்கினை லிப்டன் சுற்று வட்டாரத்தில்



நடாத்தியது. அதன் பின்னர் சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கை பெண்கள் அமைப்பு நோர்வே தூதரகத்தை அடைந்து எரிக் சொல்ஹேய்மிடம் அதிகரித்து கொண்டு வரும் வன்முறைகளை முடிவிற்கு கொண்டு வந்து சமாதானப் பேச்சு வார்த்தைக்கு திரும்புமாறு கோரி ஓர் விண்ணப்பத்தினை கையளித்தது.

### 1 முதல் 28, பெப்பிரவரி 2006

பெப்பிரவரி 1, 2006 முதல் சமாதானத்திற்கான பிரசாரச்செயல் ஒன்றினை சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கை பெண்கள் அமைப்பு லிப்டன் சுற்று வட்டாரத்தில் சமாதான அமைதி போராட்டப் பிரசாரத்தை தினந்தோறும் பிற்பகல் 12.30 மணிக்கும் 1.00 மணிக்குமிடையில் (திங்கள் முதல்




வெள்ளி வரை) நடாத்தியது. ஒவ்வொரு வார நாட்களும் கொழும்பில் உள்ள சிவில் சமூக ஸ்தாபனங்களிலிருந்தும் தனியார் துறையிலிருந்தும் 10 முதல் 12 பெண்கள் வரை லிப்டன் நீர் ஊற்றுக்கு அண்மையில் ஒன்றிணைந்து "மரணம் வேண்டாம் வாழ்வு வேண்டும்: போர் வேண்டாம் சமாதானம் வேண்டும்" என்ற தலைப்பிலே பிரசாரத்தினை நடாத்தினர். இது பெப்பிரவரி 28, 2006 வரை தொடர்நது நடைபெற்றது.

### பெப்பிரவரி 10, 2006


**ஜனாதிபதிக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் ஓர் மனு :**

பெப்பிரவரி 10, 2006 அன்று சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கை பெண்கள் அமைப்பானது மேன்மை தங்கிய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழீழ விடுதலை புலிகளின் தலைவா திரு. வேலுபிள்ளை பிரபாகரனுக்கும் வலுவான போர் நிறுத்தை உறுதி செய்யவும் போச்சு வார்த்தையை மீள ஆரம்பிக்கவும் கோரி ஓர் விண்ணப்பத்தை கையளித்தது. இம்மனுவின் பிரதி ஒன்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிற்கும் தமிழீழ விடுதலை புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்செல்வனுக்கும் மற்றும் சகல ஊடகங்களுக்கும் வழங்கப்பட்டது.



வெசாக் விளம்பரப் பதாகை

### பெப்பிரவரி 20, 2006

சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கை பெண்கள் அமைப்பானது சமாதான அமைதிப் போராட்ட பிரசாரம் ஒன்றினை நீர் கொழும்பு வீதியிலுள்ள கட்டுநாயக்க விமானநிலைய சந்தியிலே பெப்பிரவரி 20 அன்று காலை 1.30 மணியளவில்




நடாத்தியது. அவ்வதிகாலை வேளையில் பேச்சு வார்த்தைகளுக்காக ஜெனீவா நோக்கி புறப்படும் அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகளின் குழு உறுப்பினர்களுக்கு இலங்கையில் சமாதானம் ட்டயமாவதற்கான எங்களுடைய மனமார்ந்த ஆவலையும் எதிர்பார்ப்பினையும் தெளிவுபடுத்துவதே இதன் நோக்கமாகும். பல்வேறு அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 200க்கும் மேற்பட்ட பெண்கள் இப்பிரசாரத்தில் கலந்து கொண்டனர்.

கோரிக்கை:

போர் நிறுத்த உடன்படிக்கை நான்கு வருடங்களை எட்டியுள்ளது.
இனியும் போர் வேண்டாம்.
போர் நிறுத்த உடன்படிக்கையை வலுபடுத்துவோம்.
**சமாதானம் - போர் வேண்டாம்**
**வாழ்வு - மரணம் வேண்டாம்.**
இதுவே இலங்கைப் பெண்களின் வேண்டுகோள்
- பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு -

### வெசாக் விளம்பரப் பதாகைகள் கொடி பிரசாரம்

சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கை பெண்கள் அமைப்பானது போர் வேண்டாம் என்ற தலைப்பில் மே மாதம் கொடி பிரசாரம் ஒன்றினை அநுராதபுரம், கட்டுநாயக்க, பொலன்நறுவை, மற்றும் காலியில் காணப்படும் வெஸாக் தோரணங்களுக்கு அண்மையிலும், பிரசித்தி பெற்ற ஆலயங்களிலும், சுற்று வட்டார சந்திகளிலும் போடப்பட்டன.

### மே 21, 2006

***நூறு கையொப்பங்களுடன் "பெண்கள் போரினை ஆதரிக்கவில்லை" என்ற அறிக்கை.***

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கொலைகளை நிறுத்தி பொறுப்புடன் செயற்படுமாறு பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு ஓர் கோரிக்கையை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தலைமை பொலீஸ் அதிகாரி மற்றும் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ் மொழிப் பத்திரிகைகளுக்கும் அனுப்பியது. இக் கோரிக்கையுடன் 118 பிரசித்தி பெற்ற பல பெண்களின் கையொப்பங்களையும் அனுப்பி வைத்தது.

மே 21 அன்று வெளிவந்த சன்டே டைம்ஸ், லங்காதீப, மற்றும் வீரகேசரி பத்திரிகைகளிலே இக்கோரிக்கை பிரசுரமானது. அதைத் தொடர்ந்து வந்த வாரத்திலும் (மே 24, 2006) டெயிலி நியூஸ் பத்திரிகையிலே பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்கள் போரினை மறுக்கின்றனர்

அரசு மற்றும் விடுதலைப் புலிகளிடமிருந்து பொறுப்பான நடத்தைக்கான அழைப்பு

**யூலை 16, 2006**

**கோரிக்கை:**

**பெண்கள் போரினை ஆதரிக்கவில்லை - கெபிடிகொல்லாவையில் அப்பாவி பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு கண்டனம்.**

யூலை 15, 2006 அன்று விடுதலை புலிகளினால் மேற்கொள்ளப்பட்டதெனக் கூறப்படும் கெபிடிகொல்லாவையில் இடம் பெற்ற பஸ் பயணிகள் மீதான கிளேமோர் தாக்குதலை கண்டித்து சகல ஊடகங்களுக்கும் சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கை பெண்கள் அமைப்பானது கண்டன செய்திகளை அனுப்பியது.

இச்செய்தி இந்நிகழ்வை தொடாந்து வந்த சனிகிழமை அன்று டெயிலி மிரர் பத்திரிகையிலும் அதை தொடர்ந்து ஐலண்ட் பத்திரிகையிலும் பிரசுரமானது.

**ஆகஸ்ட் 17, 2006**

**பேரணி — போருக்கு எதிரான தேசிய முன்னணி ஊர்வலத்தில் கலந்து கொள்ளல்**

போருக்கு எதிரான தேசிய முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட சமாதான ஊர்வலத்தில் சுமார் அறுபது பெண்கள் கலந்து கொண்டனர். இப்பேரணி பிற்பகல் 2.30 மணியளவில் "டன்பார்க் மைதானத்தில் ஆரம்பித்து விக்டோரியா பூங்காவின் திறந்த வெளியரங்கினை சென்றடைந்தது. சுமார் 5000 மக்களை உள்ளடக்கிய ஓர்



பேரணியாக இது காணப்பட்டது. சிங்கள பௌத்த கடும்போக்குடைய இனவாதக் கட்சிகளை சார்ந்த பௌத்த பிக்குகளினால் இவ் ஊர்வலம் தாக்கப்பட்டது.

பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு மற்றும் இலங்கையின் அன்னையர் புதல்வியர் அமைப்பும் தங்களுடைய சொந்த அமைப்புகளின் கொடியின் கீழ் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

**ஆகஸ்ட் 4, 2006 - ஒக்டோபர் 4, 2006**

**லிப்டன் சுற்றுவட்டாரத்தில் சமாதான பேரணி பிரசாரங்கள் :**

நாட்டில் நடைபெற்று வரும் போரையும் அரசியல் கொலைகளையும் எதிர்க்க பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு ஒவ்வொரு புதன் கிழமை அன்றும் லிப்டன் சுற்று வட்டாரத்தில்



நடைபெறும் சமாதான பிரசாரத்தில் கலந்து கொள்கின்றது. மாலை 4.30 மணி தொடங்கி 5.30 மணி வரைக்கும் ஓர் சிறிய கூட்டத்திலான மக்கள் லிப்டன் சுற்றுவட்டாரத்தில் (ஒடேல் அருகில்) ஒன்று கூடுகின்றனர். இப் பிரசார நிகழ்வானது பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு உள்ளிட்ட பல சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்டெம்பர் 21, 2006**

***சர்வதேச சமாதான தினத்தன்று பெண்களின் சமாதானப் பிரசாரம் :***

இலங்கை அரசாங்கத்திற்கும் எல் ரீ ரீ ஈ இயக்கத்திற்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதுடன் யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அழுத்தங் கொடுப்பதற்கான அமைதியான ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.




இது சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இலங்கை பெண்கள் அமைப்பின் கீழ் விப்டன் சுற்று வட்டாரத்தில் பிற்பகல் 1.30 முதல் 2.30 வரை நடைபெற்றது. மட்டக்களப்பு, பொலன்நறுவை, புத்தளம், குருநாகல், பலாங்கொடை, கலேவெலை, காலி, பத்தள, பதுளை, "அட்டன், மஹியங்கனை, ஜா-எலை மற்றும் கொழும்பு போன்ற பிரதேசங்களிலிருந்து சுமார் 250 பெண்கள் இதில் பங்குபற்றினர். பிரசாரத்தல் பங்குபற்றிய அனைவரும் வெள்ளை அல்லது கறுப்பு நிற ஆடைகளையே அணிந்திருந்தனர்.

சமாதான பிரசாரத்தின் முக்கிய இலக்கு சர்வதேச சமாதான தினத்தை நினைவு கூருவது மட்டுமன்றி இலங்கையில் சமாதானம் மலர வேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் அர்ப்பணிப்பை அரசாங்கம், விடுதலைப் புலிகள் மற்றும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டி சமாதானப் பேச்சு வார்த்தைகளை உடனடியாக மீள ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொள்வதாகும்.

ஒரு மணி நேரம் சுலோக அட்டைகளை ஏந்தி நின்றதன் பின்னர், சுற்றுவட்டாரத்தில் கூடியிருந்த அனைவரும் சமாதான வாசகங்களை கொண்ட பல வர்ண பலூன்களை வானில் பறக்க விட்டனர். அதன் பின்னர் அனைவரும் கொடிகளையும் சுலோகங்களையும் ஏந்திய வண்ணம் விக்டோரியா பூங்காவை நோக்கி பேரணியாக சென்று மீண்டும் ஆரம்ப இடத்திற்கு வந்து நிகழ்ச்சியை நிறைவு செய்தனர்.

***பிரசாரத்தில் உபயோகப்படுத்திய வாசகங்கள் :***

கொலைகளை நிறுத்து,
பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பி,
இரத்தம் சிந்தப்படுவதை நிறுத்து,
கடத்தல்களை நிறுத்து,
உயிருக்கு பாதுகாப்பை உறுதி செய்,
எமக்கு சமாதானமே வேண்டும் போரல்ல,
மக்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பு கொடு,
சகலருக்கும் பாதுகாப்பு கொடு,
அரசியல் கொலைகளை நிறுத்து.

இவ்வாசகங்களும் கூற்றுக்களும் தமிழ் மற்றும் சிங்கள, ஆங்கில மொழிகளில் எழுதப்பட்டிருந்தன. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 250 பெண்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**நவம்பர் 8, 2006**

***உலர் உணவு பொருட்களை யாழ்பாணத்திற்கு தபால் மூலம் அனுப்புதல்***

சமூதாயம் சார்ந்த அமைப்புகள், அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தேவாலயங்களும் இணைந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை தபால் சேவை மூலம் அனுப்பி வைக்கும் ஓர் திட்டத்தை ஆரம்பித்தனர். A9 பாதையை மூடியதால் யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்ல விதிக்கப்பட்டிருக்கும் தடையினை கண்டித்து பட்டினியினால் உயிரிழப்புகள் நேரக் கூடாது என்ற செய்தியை அரசாங்கத்திற்கு தெரிவிக்கவும் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

உலர் உணவுகளை வாங்கி அப்பொதிகளை தலைமை தபால் நிலையத்தில் கொடுத்து அனுப்பி வைப்பதன் மூலம் பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டது. அரிசி, சீனி, பருப்பு, தேயிலை, பால் மா, போன்ற பல உலர் உணவு வகைகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**டிசம்பர் 13, 2006**

***ரவிராஜின் கொலையைக் கண்டித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் :***

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் கொலையைக் கண்டித்து இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தனிப்பட்ட மனிதனாக சமாதானத்திற்கு குரல் கொடுக்க ஆரம்ப கட்டத்தில் உழைத்தவாகளில் ஒருவர் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரீதியில் இக்கண்டனப் பேரணி பல அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. அதில் பங்குபற்றியவர்கள் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து சமாதானத்திற்காக உழைக்கும் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

இவற்றைவிட, சமாதானம் பற்றிய தொலைக்காட்சிக் கலந்துரையாடல்களும், தொலைக்காட்சி விளம்பரங்களும், வானொலி சமாதான செய்திகளும் SLWPD இனால் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

சமாதான செயற்பாடுகள் ஏராளமானவற்றை ஏற்பாடு செய்வதன் ஊடாக யுத்தமின்றி சமாதானம் நிலைபெற்ற ஒரு நாட்டை கூடுதல் விரைவில் மலரச் செய்வதற்காக SLWPD ஏற்பாடு செய்யும் இந்த முயற்சிகள் பெரிதும் போற்றுவதற்கு உரியனவாகும். தற்போதைய நிலைவரத்துடன் சமாதானத்திற்காகப் பணியாற்றுவது ஓரளவு சவால் நிறைந்த பணியாக அமைந்த போதிலும், இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியோரை நோக்கும்போது "சமாதானம் தேவை" என உரத்துக் குரல் எழுப்புவோர் இன்னும் அணிதிரண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். யுத்தத்திற்குத் தூபமிடும், அடிப்படைவாதக் கருத்துக்களைத் தாங்கியோர் மத்தியில், ஊடகங்கள் வாயிலாக மனித மனங்களில் யுத்தத்தின் நச்சு விதைகளைத் தூவுவோர் மத்தியில்கூட சமாதானத்திற்காகத் தம்மை அர்ப்பணித்துக் குரல் எழுப்புவோர் இருப்பது பெரும்பேறாகும்.

"யுத்தத்தின் இறுதி விளைவு அழிவுகளே அன்றி வெற்றியல்ல" என்பது யதார்த்தமானதாகும். இருப்புடைய மனித சந்ததியொன்றாக நாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டியது, சமாதான சகவாழ்வை அன்றி யுத்த மனோநிலையை அன்று. சமாதானம் குறித்து மக்களிடையே நிலவும் அறியாமையை அகற்றி, விஸ்வரூபமெடுத்துள்ள யுத்தத்தின் கரு நிழலை இந்நாட்டை விட்டும் பூண்டோடு ஒழிப்பதற்கான காலம் இன்று தோன்றியுள்ளது. அதற்காக நாம் ஒவ்வொருவரும் தொண்டு அடிப்படையில் முன்வந்து அணிதிரள வேண்டும். அது, இன்று அன்றி நாளையல்ல... ■

**வேலாயுதம் ஜெயசித்ரா**

**புகைப்படங்கள் : ஜெயந்தி குரு உத்தும்பால**

## மட்டக்களப்பில் சமாதான தினம்



யுத்தத்தினால் மிக மோசமாக பல வருடங்களாகப் பாதிக்கப்பட்டு வந்த இடம் மட்டக்களப்பு. கைதுகள், காணாமல் போதல்கள், இனந்தெரியாதோரால் மேற் கொள்ளப்படும் கொலைகள், தாக்குதல்கள் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற இடப் பெயர்வுகள் எனப் போரின் அனர்த்தங்கள் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் அலைக் கழிவுகள் ஏராளம்.

இத்தகைய நிலையில் சர்வதேச சமாதான தினமான செப்டெம்பர் 21ம் திகதி பல சிவில் அமைப்புக்களுக் கூடாக மக்கள் தம் சமாதானத்துக்கான விருப்பை வெளிக் காட்டினர்.

இந்த சமாதான நிகழச்சியை மட்டக்களப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையம் அனைத்து மத நிறுவனங்களுடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்தது.

பேரணியும் பிரார்த்தனையும் என்ற வகையில் மட்டக்களப்பின் கத்தோலிக்க தேவாலயம்,பௌத்த விகாரை, இஸ்லாமிய பள்ளி வாசல் இந்துக்களின் கோயில் என நான்கு வழிபாட்டுத் தலங்களையும் இணைத்தது. 21.09.2006 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு மட்டக்களப்பு தாண்டவன் வெளி புனித காணிக்கை மாதா தேவாலயத்தின் முன்றலில் ஆரம்பமாகி கோட்டைமுனை மெதடிஸ்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தினைச் சென்றடைந்து பிரதான வீதி வழியாக ஸ்ரீ மங்களராம விகாரயைச் சென்றடைந்தது. அங்கிருந்து பொது வாசிகசாலை முன்றலைச் சென்றடைந்து சமாதானத் தடி (Peace Pole) நடப்பட்டு பின் புளியந்தீவு ஜாமியத்துஸ்ஸலாம் பள்ளி வாயிலைச் சென்று அங்கிருந்து ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தை சென்றடைந்தது. அங்கு சமாதானப் பிரார்த்தனைகளும், சர்வ மதத் தலைவர்களின் ஆசியுரைகளும் நிகழ்ததப்பட்டன. சமாதானத்தின் தேவை உரத்து ஒலிக்கப்பட்டது ! கூட்டத்தில் வாசிக்கப்பட்ட சமாதானப் பிரகடனம் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இதிலே சமாதானத்துக்கான சர்வமத நிறுவனம், எஸ்கோ, நேத்ரா, டெஸ்மியோ, உழைக்கும் மக்கள் அபிவிருத்தி நிறுவனம், நெசீடா பெண்கள் அபிவிருத்தி நிறுவனம், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் ஆகிய பெண்கள் அமைப்புக்கள் உட்பட முப்பதிற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கு கொண்டன. ■

## அக்கரைப்பற்றில் சமாதான தினம்

பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் (Affected Women's Forum) 21.11.2006 அன்று நடாத்திய சமாதான செயலமர்வு சம்பந்தமான பயிற்சி அறிக்கை.

சமாதான பயிற்சியானது நாற்பது இளைஞர் யுவதிகளுக்கு நடாத்தப்பட்டது. இதில் தமிழ், முஸ்லீம் ஆகிய இரு இனத்தினரும் கலந்து கொண்டனர். இப் பயிற்சியின் முக்கியமான நோக்கமாக பிரச்சனைகளை இனம் காணலும் அவற்றிற்குரிய தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறை களை இனம் காணுதலும் ஆகும்.

முதலில் பயிற்றுனர்களிடமே கேள்விகள் கேட்கப்பட்டு அதன் மூலம் கருத்துக்களை பெற்று தெளிவுபடுத்தப்பட்டன. அதிலும் முதலாவதாக எங்கிருந்து பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன எனக் கேட்கப்படுகையில் அவர்கள் முன் வைத்த கருத்துகள் (எனக்குள்/சமூகம்/குழுக்களுக்கிடையில்/கணவன் மனைவி/ஊர் கிராமம்/குடும்பம்/நாடு/நண்பர்கள்) போன்ற கருத்துகளாகும்.

அதனைத் தொடர்ந்து அவர்களிடம் குழு வேலை மூலம் ஏன் பிரச்சனைகள் ஏற்படுகின்றது என வினாவப்பட்ட போது பின்வரும் கருத்துகள் பெறப்பட்டன. (கருத்து முரண்பாடுகள்/புரிந்துணர்வின்மை/தேவைகள் நிறைவேற்றப்படாமை/விட்டுக்கொடுக்காமை/ஒற்றுமையின்மை/சமத்துவமின்மை/மொழி/ஏற்றுக் கொள்ளாமை/தாழ்வுமனப்பான்மை/போட்டித் தன்மை போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எனவே இவற்றை எவ்வாறு தீர்துக் கொள்ள முடியும் என கலந்துரையாடப்பட்ட போது புரிந்துணர்வை ஏற்படுத்தல்/கலந்துரையாடல்/விட்டுக் கொடுத்தல்/ஒற்றுமையாக இருத்தல்/சமத்துவத்தைப் பேணல்/அறிவினைப் பயன்படுத்தல்/விளங்கிக் கொள்ளல் போன்றவற்றில் நாங்கள் ஒவ்வொருவரும் ஈடுபட்டால் பிரச்சனைகளை குறைக்க முடியும் என விளங்கிக் கொண்டனர். பயிற்சியின் இறுதியில் அவர்களின் கருத்துகள் மீளாய்வு செய்யப்பட்டு பெறப்பட்ட கருத்துகள் பின்வருமாறு.

இரு இனத்தவரும் சரி நிகராக பயிற்சியில் ஈடுபடல் அவசியம்.

இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் தங்கி நின்று பயிற்சிகளை பெறுவதனால் கூடுதலான நட்புறவு இரு இனங்களுக்கிடையில் ஏற்படும்.

களங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கும், இனங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கும் இயன்ற உதவிகளையும் ஆலோசனைகளையும் எங்களால் கொடுக்க முடியும்.

எங்களைப் போன்று ஏனைய இளைஞர் யுவதிகளுக்கும் இப் பயிற்சிகள் அவசியம். அவற்றை AW F நிறுவனம் ஒழுங்கு செய்து தர வேண்டும்.

பயிற்சியில் மட்டுமன்றி ஏனைய நேரங்களில் இரு இனங்களும் ஒன்றிணைந்து கலந்துரையாடக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும். அப்போது தான் சிறந்த தொடர்பாடல் பேணப்படும்.

மேலதிகமாகவும் பயிற்சிகள் தேவையாய் உள்ளது என அவர்களின் மீளாய்வுக் கருத்துக்களில் முன் வைக்கப்பட்டதுடன் இப் பயிற்சி இனிதே நிறைவு பெற்றது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பசு



**- எம்.டி. ரெத்தம்மா**

திவாகரன் பிள்ளையின் வீட்டுக்குச் சென்று திரும்பியதும் மாமாவும் அப்பாவும் இவ்வாறு கதைக்கலாயினர்.

"இந்த முயற்சி கைகூடினால் கனகம் அதிர்ஷ்டக்காரி தான்..."

"கொஞ்ச நஞ்ச சொத்தா...? தாயும் மகனும் தானே. உடன் பிறப்புகளும் இல்லை. அப்பாவும் இல்லை. கைக்கூலி கொடுக்க கஷ்டப்படுறளவுக்கு பொம்புளப் புள்ளகளும் இல்லை... அம்மா இருந்தாலும் அவருக்கு இப்போ ரொம்ப வயசு..."

கதவிடுக்கில் சிறைப்பட்டவளாக காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டாள் கனகம்... வாய் நிறைய வெற்றிலையைத் திணித்து மென்று கொண்டிருந்த இளைய மாமா விறாந்தையெங்கும் வெற்றிலைச் சாற்றை உமிழ்ந்து தனது கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தார்.

"பழைய அமைப்பிலான வீடு அது.... விறாந்தையின்ரை கோடி வரை நீண்டதொரு மாட்டுத் தொழுவம்...

அதப் பார்க்கிறப்போ அங்கு யாருமே இல்லயென்ற எண்ணம் தோன்றும். அந்தளவு நீண்டது. நிறையவே பசுக்கள்... ரொம்பவும் கொழுத்துப் பருத்த பசுக்கள். அப்படித்தானே மச்சான்...?"

மாமா அவ்வாறு கூறியது, அப்பாவிடம். அப்பா அதனை ஆமோதித்தது போல தலையசைப்பதை அவள் கதவிடுக்கு வழியே காணத் தவறவில்லை.

அவரது முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது. அவர் அந்தளவுக்கு பெருமிதம் அடைந்தார்..

சற்றுநேரம் சிந்தனைக் கடலில் மூழ்கியிருந்த அவர் பிதற்றலானார்...

"கவன்மண்ட் உத்தியோகத்தால என்ன பிரயோஜனம்? அதுவும் இந்தக் காலத்தில... அதிலேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கிற சின்னச் சம்பளத்தில என்னத்த சாதிக்க முடியும்... ஹ்ம்...?"

சற்று நேரத்தில் மீண்டும் அவர் தொடர்ந்தார்.

"அந்தப் பண்ணயின்ற சீர் சிறப்பை மச்சான் கண்டனீர் தானே... நான் நினக்கிறன் ரெண்டு மூன்று ஏக்கர் பிடிக்கும். வாழ மரங்கள்... தென்ன மரங்கள்... தோட்டமெங்கும் இன்னும் வகை வகையான மரங்கள்... எல்லாமே ஒரு தனி மனிஷனின்ற துணிகரம்... திவாகரன் பிள்ளையின்ற பால் பண்ண எதுக்கு ரெண்டாம் பட்சம்..? கொளுத்த வருமானம் தான்..."

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த அம்மா நிம்மதிப் பெருமூச்சு விட்டார். அவர் இரு கரங்களையும் கூப்பியவளாக கண்களை இறுக மூடிக்கொண்டு ஒரு கணம் தெய்வத்தை நினைத்துக் கொண்டாள்.

"எல்லாமே என்ற பெட்டையோட அதிர்ஷ்டம் தான், கடவுளே..."

கூடவே அம்மாவின் மனதில் அச்சமொன்றும் துளிர் விட்டது.

"எல்லாம் எப்படிப் போனாலும் எனக்கு சற்றுப் பயமாகவும் தான் இருக்கு... இந்தளவு மாடுகள் இருக்குமென்றால் ஓய்வில்லாமல் உழைக்க வேண்டியும் இருக்கும். கனகம் வேலைக்குக் கள்ளி... சின்னப் பசங்களோட கூத்தடிப்பதும் விளையாடுவதுமே அவளோட வேலை...."

அப்பா உரத்துச் சிரித்தார்... அதற்கு பதிலளிப்பது போல்...

"மச்சான் கேட்டனீர் தானே கதையை... அதனோட அர்த்தம் புரிந்திருக்குமே...? பொம்புளங்களோட புத்தி வேலை செய்றதுக்கு கொஞ்சம் நேரமெடுக்கும். நீங்க நினைக்கிறீங்களாக்கும் உங்களோட மகளக் கட்டிக் கொடுக்கிறது மாடுகளைக் கவனிப்பதற்குத் தானென்று... அதுக்கு வேற ஆக்கள் இருக்கிறாங்கள்... திவாகரன் பிள்ளை எல்லாத்தையும் கவனித்துக் கொள்வார்... அவங்க தான் கூறினாங்கள்... திவாகரன் பிள்ளை வேற யாரையும் மாட்டுத் தொழுவத்துக்கு போக விடமாட்டாராம்... அந்தப் புள்ள தான் எல்லா வேலயும் கவனித்துக் கொள்கிறார். தொழுவத்த துப்புரவு செய்றது... பால் கறக்கிறது... எல்லா வேலைகளயும் தான்... என்ட மனசுக்குப் பட்டது பெடியன்ற கீழ்ப்படிவு... இந்த மாதிரி ஒரு பெடியன இந்தக் காலத்துல தேடிப் பிடிகிறது சாதாரண விஷயமா...?

அப்பாவின் சோடணை வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த இரண்டாவது அக்கா கனகத்தின் காதில் குசுகுசுக்கலானாள்.

"அந்த மனுஷன் எல்லா வேலைகளயும் கவனித்துக் கொள்றது, வேலை செய்றதுக்கு யாருமே இல்லாத காரணத்தாலயாக்கும்... நல்ல கவனமாக் கேட்டுக்க கனகம்... அங்க போனப்புறம் எல்லா வேலைகளயும் நீ தான் கவனிக்க வேண்டி இருக்கும்"

"போடீ... பொடிச்சி..."

அந்தக் கதையைக் கேட்டதும் நாணத்தால் தலை குனிந்தாள் கனகம். திவாகரன் பிள்ளை கைக்கூலி எதையும் கேட்கவில்லை. தங்க ஆபரணங்கள், பணம், சொத்துக்கள் ஒன்றையும் கேட்கவில்லை. தாழ்மையான, நேர்மையான, நல்ல ஒரு பெண் பிள்ளையே அவனுக்குத் தேவை. அவன் அவளை முதலில் கண்ட வேளையிலேயே அவள் மீது மையல் கொண்டான். கனகத்தின் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உறவினர்களுக்கும் அது பெரும் நிம்மதி அளித்தது. ஐந்து பெண் பிள்ளைகளில் கனகம் மூன்றாமவள். முதல் இரு திருமணங்களினதும் சுமையும் பொறுப்புகளும் இன்றும் நீங்கவில்லை. ஏற்கனவே வயதுக்கு வந்த இரு தங்கைமாரும் வீட்டில் இருந்தனர். கனகத்தின் மனதில் இந்தத் திருமணம் பற்றி பெரு விருப்பு இருக்கவில்லை. அவளின் எதிர்பார்பு காலையில் அலுவலகத்திற்குச் சென்று மாலையில் வீடு திரும்பும் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் ஒருவருக்குத் தாரமாக இருப்பது தான். முதற் பட்டத் தேர்விலும் சித்தியடைந்தவள் கனகம். அவள் கல்வி கற்கும் காலத்தில் தனக்கு மெத்த ஜோடிப் பொருத்தமானவர்கள் என நினைத்த இளைஞர்கள் சிலரைப் பற்றிய எண்ணம் அவளின் நெஞ்சில் நிழலாடியது. அவ்வாறான ஒரு மாப்பிள்ளையை தனது புருஷனாக்கிக் கொள்ள மிக விரும்பினாள்.

"ஏன் பேச்சையே காணலை... உமக்கு விருப்பமில்லையா.?"

அம்மாவும் அக்காவும் ஒருமித்துக் கேட்டனர்.

'இவளோட மனசில வேறொருவனோட எண்ணம் இருக்குது போல.." - இது தங்கை.

அதற்கு பதிலளித்த தாயின் குரலில் கடுமை தொனித்தது.

"வேறெந்த எண்ணம்...? அதில வேலையில்ல.. உமக்கு இப்படி ஒரு விஷயம் வரப் போறதில்ல.. இந்த விஷயத்துக்குச் சரோஜா.. கமலாவின்ற திருமணத்த விட நான் விருப்பம். எல்லாம் பகவதியின் கருணைப் பார்வை, அனுக்கிரகம் எங்களுக்கு கிடைப்பதால் தான்..."

கனகத்தின் கழுத்தில் திவாகரன் தாலி கட்டினான். வாழ்வில் என்றுமே அனுபவிக்காத அளவு சோகத்தை காரில் பயணிக்கும்போது திவாகரனின் அருகே அமர்ந்திருந்த வேளையில் கனகம் உணர்ந்தாள். அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் நிழலாடிய உருவம் திவாகரன் பிள்ளையினால் மாற்றப்பட்டு விட்டது. அந்த வீட்டு முற்றத்தில் காலடி எடுத்து வைக்கும்போதே அவளது நினைப்பு நியாயமானதே என்று அவளுக்குத் தோன்றியது. யானைகள் போல் வளர்ந்த மாடுகள் நிறைந்த மாட்டுத் தொழுவங்கள் நீண்ட சாலைகள் போன்று தோன்றின. உயர்த்திய தலையுடன் வைத்த கண் வாங்காமல் தொழுவத்திலிருந்த மாடுகள் திருமண ஊர்வலத்தைக் கண்டு களித்தன.

மாலையாவதற்குள் திருமண வீடு வந்தவர்கள் மீண்டும் திரும்பிச் செல்லலாயினர். நாடகம் முடிவில் அரங்கு போல் முழு வீடும் வெறிச்சோடிக் கிடந்தது. வீட்டில் எஞ்சியிருந்தவர்கள்.... மாமியாரும், கணவரும், அவளும் மாத்திரமே... பருத்த உடலுடைய, அழுக்கும் சாம்பல் நிறமுமுடைய உடை உடுத்திய வேலைக்காரியும் அங்கிருந்தாள்.

மாமியார் நேர காலத்துடனேயே படுக்கைக்குச் சென்றார். அவருக்கு கழுத்தில் சுளுக்கு ஏற்பட்டிருந்தது. மகனின் திருமண வைபவத்திற்காக ஓய்வு உலைச்சலின்றி வேலைசெய்ததால் ஏற்பட்ட நோ அது...

இரவானது...

அறையில் கனகம் தன்னந் தனியாக இருக்கின்றாள். அவளது கணவன் எங்கே? அவள் சற்று நேரத்துக்கு முன் அவனைக் கண்டாள். அவளது கண்கள் அவனைத் தேடலாயின. அறையில் சுவரின் மூலையில் மாட்டப்பட்டிருந்த அந்தப் பழைய கடிகாரம் ஒன்பது முறை அடித்து ஓய்ந்தது. அவன் இன்னும் இராப் போசனத்திற்காக திரும்பவில்லை. அவன் வேறெங்கு சென்றிருக்கலாம்? புது மணத் தம்பதியினரின் வாழ்வில் முதல் இரவல்லவா? அவளுக்கு அலுப்பாகவும் களைப்பாகவும் இருந்தது. பிறந்த வீட்டிலிருந்து பிரிந்து குடும்பத்தவரை விட்டு தூர விலகியது அவளுக்கு வேதனையாக இருந்தது. ஓய்வில்லை.... அவளுடைய நினைவு வெறுமையானது.

யன்னலோரமாக நின்றுகொண்டிருந்த அவளது கண்கள், தன்னை அறியாமலே மாட்டுத் தொழுவத்தில் இருள் கவிழ்ந்த பகுதியில் அவனைத் தேடுவதை உணர்ந்தாள். லாந்தரை உயர்த்திப் பிடித்தவனாக திவாகரன் பிள்ளை அங்கு நின்று கொண்டிருந்தான். மற்றைய கையினால் வைக்கோலை அள்ளி எடுத்து மாடுகளுக்கு தீனி போடுகிறார் போலும். இல்லை... அவற்றின் உடம்பைத் தடவிக் கொடுக்கிறார் போலும்...

**கனகம் இருளில் பற்களைக் கடிந்து கொண்டாள். எனினும், அவளின் கண்களில்**

அவளது உள்ளத்தில் ஆத்திரமும் வேதனையும் பொங்கி எழுந்தன.

"இன்று நாள் பூராவும் அவன் இந்த வேலையில் இருப்பானோ..?"

அவள் யன்னலோரமாக இருப்பதைக் கண்ட அவன் அவளருகே வந்தான். லாந்தரை ஒரு பக்கமாக உயர்த்திப் பிடித்தவனாக அதன் திரையை விலக்கிய அவன்,

"உமக்கு நித்திரை வருகுதா? அப்படித்தானே? இன்றைக்கு இதுகளை பார்க்கவே முடியாமல் போயிற்று.... இதுகள் நான் வரும்வரைக்கும் காலையிலிருந்தே காத்திருக்கின்றன. நான் வரவில்லையானால் அவை கத்தத் தொடங்கிவிடும். அந்தப் புள்ளிக் கன்றுக்குட்டிக்குத் தான் என்னைக் காணாவிட்டால் ரொம்பவும் கவலை.. இப்போ நான் தண்ணீர் கொடுத்தேன்... ஆனால் அது குடிக்கலை...."

அவனது கதையைக் கேட்டுக் கொண்டிருக்க அவளுக்குப் பொறுக்கவில்லை. கேட்டுக் கொண்டிருக்க விருப்பமுமில்லை... அவள் நித்திரை கொள்பவள் போல் அங்கிருந்தாள்.

"சாப்பிட்டுவிட்டு தூங்கலாம்.. வாறீங்களா.."

அவள் மெதுவாக அவனைத் தொடர்ந்து சென்றாள்.

வேலைக்காரி, குசினித் தரையில் விரித்த ஒரு சாக்கில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். அவன் அவளை எழுப்பி விட்டாள்.

"ஏன்... ஒன்பது மணிக்குள்ளாவே நித்திரை...?

"சோறு போடு,"

அவர்கள் இருவரும் அருகருகே அமர்ந்து கொண்டனர். எனினும், இருவரும் ஒரு வார்த்தையேனும் பரிமாறிக் கொள்ளவில்லை. எதனைப் பற்றியும் அவள் கரிசனை கொள்ளவில்லை. அவள் பசிக் களையையும் உணரவில்லை. அவளது மனதில் இருந்த சகிக்க முடியாத உணர்வலைகள் வேலியை உடைத்துக் கொண்டு தாண்டிச் சென்றது. அவளது காதில் ஏதோ ஓர் ஓசை முணுமுணுத்தது.

"எதிர்பார்த்தது இது போன்ற ஒன்றல்ல... இது நடக்க வேண்டியது இப்படியல்ல..."

அவள் சற்று தலையைத் தூக்கிப் பார்க்கலானாள். வைக்கோல் பதர்களும் தூசும் அவனது உடல் பூராவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்திருந்தன. அவன் சோற்று உருண்டைகளை ஒவ்வொன்றாக விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தான். அவர்கள் மீண்டும் சயன அறைக்கு வந்தனர்.

"கனகம், நீர் உறங்கும்.... நான் சீக்கிரமா திரும்பி விடுவன்... அதுகள் நீர் அருதிட்டனவா என்று ஒருகணம் பார்த்திட்டு திரும்பிடுறேன்..." அவன் கூறினான். லாந்தரின் சுவாலையை உயர்த்தியவனாக அவன் தொழுவத்தை நோக்கி விரைந்தான்.

அவள் கட்டிலில் சாயவில்லை. அவன் வெளியேறிச் செல்வதை யன்னல் வழியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு கன்றின் அருகே சென்று தனித் தனியாக தனது கணவன் அவற்றுடன் இரகசியமாக ஏதோ பேசியவாறு தீனி போடுவதைப் பார்க்கும்போது அவளுக்குள் ஏதோ இனம் புரியாத ஒரு தாழ்ப்புணர்வு... சகிக்க முடியாத ரணங்களை உணர்ந்தாள்.

"அவருக்கு என்ன விட அந்த மிருகங்களோட தான் பாசம் அதிகம்... நான் அவரோட மனைவி என்றாலும் எங்கே எனக்கு இந்தளவு கவனிப்பு....?"

முதல் தடவையாக அந்த வாய் பேசா ஜீவன்களுடன் அவளுக்கு குரோத உணர்வு தோன்றியது. அது மெதுமெதுவாக பழிவாங்கும் உணர்வு வரை விஸ்வரூபமெடுத்தது.

அவள் தனியாகவே கட்டிலில் சாய்ந்தாள். தன்னை அறியாமலே கண் அயர்ந்தாள்.

அவள் ஒரு தடவை இரவில் தீடீரென திகைத்தெழுந்தாள். தன்னருகே தனது கணவர் படுத்துறங்குவதை இருளில் உணர்ந்தாள். அவனது மேனியிலிருந்து வைக்கோல், பிண்ணாக்கு, வியர்வையின் துர்வாடை வீசியது. அவள் மறுபக்கமாகத் திரும்பினாள். அவள் அதிகாலையில் கண் விழித்ததும் யன்னல் வழியே எறிட்டுப் பார்த்தாள். அவன் மாட்டுத் தொழுவத்தில் பால் கறந்து கொண்டிருப்பதைக் கண்டாள். அவனருகே பால் பாத்திரத்தை ஏந்தியவளாக அவனது தாய் காத்திருந்தாள்.

கனகத்திற்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. இந்தத் தாய்க்கும் பிள்ளைக்கும் ஒரே மாதிரியான சிந்தனை... ஒரே மாதிரியான உணர்வு... இது அவர்களின் உணர்வுடன் கலந்த தொழிலாக இருக்குமோ...? அவள் சயன அறையை விட்டு வெளியே வரவில்லை. அங்கிருந்து அசையவில்லை... முரண்டுபிடித்த ஒரு பிள்ளையைப்

போல் இருந்தாள்.

தனது கணவன் தன்னருகே வருவான் என கனகம் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

பால் கறந்து முடித்த பின் மாடுகளை அவிழ்த்துவிட்ட அவன் இடத்துக்கிடம் அவற்றைக் கட்டலானான்.

விருப்பம் நிறைவேறாத கனகம் அறையிலிருந்து வெளியே வந்து பல் துலக்கலானாள்.

அதனைக் கண்ட மாமியார் 'பொழுது விடிஞ்சது இப்ப தான் போல...' என விசாரிக்கலானார்.

"திவாகரனுக்கு ஏதாச்சும் சமைச்சா நல்லது, அவன் வேலை முடிஞ்சு திரும்புறதுக்குள்ள... இன்னுமா அவனுக்கு வேலைக்காரி சமைக்கிறதை சாப்பிடக் கொடுக்க வேணும்...?"

கனகத்திற்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. அவள் எதுவுமே பேசாமல் முகம், கை கால் கழுவலானாள்.

"வேற நாட்கள்ள என்ன சமைக்கிறது..." வேலைக்காரியிடம் மெதுவாகக் கதை கொடுத்தாள்.

"உப்புக் கஞ்சி"

"ஆ... அது நல்லது.. இன்டைக்கும் அதனையே சமைச்சு வச்சாப் போச்சு..."

"பொழுது விடிகிறதுக்குள்ள நான் சமைச்சிட்டன்" வேலைக்காரி குசுகுசுத்தாள்.

"ரொம்ப நல்லது."

முற்றத்தை நோக்கி நடக்கலானாள் கனகம். வாழை மரத்தடியில் இருந்த பெட்டைக் கோழிகள் நிலத்தைக் கிளறி ஏதையோ தேடுவதைக் கண்டாள். இந்தக் கோழிகள் யாருடையவை என்ற சிந்தனையுடன் முற்றத்தைச் சுற்றி உலா வந்தாள். புள்ளியுடைய கன்றுக்குட்டி தென்னை மரத்தில் கட்டப்பட்டிருந்தது. பால் போல் வெள்ளை நிறமான மேனியில் கரும் புள்ளிகள் அழகாகத் தெரிந்தது. அவளைக் கண்டதுமே கன்றுக்குட்டி 'உம்பே..." எனக் கத்தியது.

அவளுக்கு கோபம் கோபமாக வந்தது.

கீழே குனிந்து சிறு தடியொன்றை எடுத்தாள். கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் சுற்றுமுற்றும் யாரும் இருக்கிறார்களா என்று நோட்டமிட்டாள். யாருமே தெரியவில்லை. கன்றுக் குட்டியை நையப் புடைத்தாள். கன்றுக்குட்டி நோ தாளாமல் கத்தியது. கதறியது. அவள் மீண்டும் நையப் புடைத்தாள். கோபத்தால் புறுபுறுத்தாள். கன்றுக் குட்டியைத் திட்டித் தீர்த்தாள்.

"நீ தான் எனது எதிரி. அந்த மனுஷன் என்ன விட உன்னோட தான் அன்பு.. பாசம் எல்லாமே... உன்னக் கவனிக்கிறன் இரு..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றுக்குட்டி கத்தும் ஓசை கேட்ட திவாகரன் குழம்பிப்போய் ஓடோடி வந்தான். கனகம் கையிலிருந்த சிறு தடியை வீசியெறிந்துவிட்டு அங்கு ஒன்றும் நடக்காதது போல் மீண்டும் பேச்சைத் தொடுத்தாள்.

"கன்றுக்குட்டி கத்தியது... ஏன் கனகம்...?"

அவளுக்குள் வெறுப்புணர்வு அலைமோதியது.

"எப்பேர்ப்பட்ட கரிசனை...?"

"தெரியலையே" உள்ளுக்குள் வெந்த குரலில் கூறினாள்.

திவாகரன் பிள்ளை கன்றுக்குட்டியைத் தடவிக் கொடுக்கலானான்.

"இன்னும் முழுகலியே..? முழுகுவதற்கு நீர் தயாராக உள்ளது" கனகத்திடம் வேலைக்காரி தான் கூறினாள்"

"ஓ...."

கனகம் முழுகி புத்தாடை அணிந்தாள். நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்ளுமளவுக்கு அல்லது கண்களுக்கு மை தீட்டுமளவுக்கு அவளது முகத்தில் ஒளிர்வு இருக்கவில்லை.

"பொட்டு வைக்கலியா...? கண்ணுக்கு மை தீட்டலியா...? என்கிட்ட தரமான அஞ்சனம் இருக்கு."

வேலைக்காரப் பிள்ளை தன் விஷயத்தில் கவனமாக இருப்பதை கனகம் புரிந்து கொண்டாள். அவள் இந்த வீட்டுக்குப் புதியவள் அல்லவா? அவள் இந்த வீட்டின் புது மணப் பெண் அல்லவா?" அவள் ஆவல் மிகுதியுடன் இருப்பதாக இருக்கலாம்.

"நான் பொட்டு வைக்கிறதுக்கு விரும்பலை. நான் கண்களுக்கு மை தீட்டிக் கொள்வதுமில்லை"

அதற்கு முற்றிலும் மாற்றமான எண்ணங்களே கனகத்தின் உள்ளத்தில் அலைமோதின.

"ஏன் இன்றைக்கு நீர் பொட்டு வைக்கலை? கண்ணுல அஞ்சனம் தீட்டவுமில்ல.."

தனது கணவன் அவளிடம் அவ்வாறு விசாரிப்பான் என அவள் ஒருகணம் எண்ணினாள்.

"கணவன் அப்படிக் கேட்டால் நான் செய்வன். பெண்டாட்டிமார் நெற்றியில பொட்டு வைச்சுக் கொள்றதும், கண்ணில மை தீட்டிக் கொள்றதும் கணவனுக்காக அல்லவா?"

சிறிது நேரத்தின் பின், மாட்டுத் தொழுவத்திலிருந்த சகல மாடுகளும் தோட்டம் பூராவும் இருப்பதை அவள் கண்டாள். அவற்றிடையே அவளது கணவனும் இருக்கக் கண்டாள். அவளைப் பார்த்ததும் அவன் சிரித்தவனாக இவ்வாறு கூறலானான்.

"இதுகளுக்கு ஆற்றில என்னோட இறங்கிக் குளிக்க ரொம்ப விருப்பம்... எல்லா நாளும் நான் அதச் செய்தன். இன்றைக்கு வெயில் கொளுந்துவிட்டு எரியுது. நான் இதுகள குளிப்பாட்டி விட்டு வாறன்." அவன் மாடுகளுடன் ஆற்றுக்குச் சென்றான்.

அவன் செல்வதைப் பார்த்திருந்த மாமியார் அது பற்றி மேலதிக விளக்கம் கொடுக்க முற்பட்டார்.

"அவருக்கு அந்த ஜீவன்களுக்கு அப்பால் ஓர் உலகம் இல்லை.... குளிப்பாட்டுவார்.. தீனி போடுவார்.... உண்ணும்போதும் உறங்கும்போதும் அதுகளப் பற்றிய நினைப்பாகவே இருப்பார். வேறொருவருக்கும் அந்த வேலைய ஒப்படைக்க அவருக்கு விருப்பமில்ல... ஒரு இரவிலயும் வெளிய தங்குவதில்ல... பிள்ளைக்கு மனுஷன்களை விட இந்த ஜீவன்களோட இரக்கம் அதிகம்... அது ஏனென்று தெரியுமா... பிள்ளையின்ற ஜாதகமும், கோபால கிருஷ்ணனின் ஜாதகமும் ஒன்னு. ரெண்டு பேருமே ஒரே ஜாதகத்தில பிறந்தவங்க..."

கனகத்தின் உடம்பெல்லாம் புல்லரித்தது.

"குணமும் பழக்கமும், எல்லாமே கோபால கிருஷ்ணன் போல என்றால் போகிற இடமெல்லாம் கோபியர்களும் அருகில வருவதாயிருக்குமே" என்று சொல்ல வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

அவர்கள் இராப் போசனத்துக்கு அழைப்பு விடுக்க வந்தனர். கனகத்தின் தாய், அப்பா, சகோதரிகள், மச்சான்மார் எல்லோரும்.. பெரிய ஒரு வைபவம்.... இராப் போசன விருந்து... திவாகரன் பிள்ளை தனது அபிமானத்தை உளப்பூர்வமாகவே தெரியப்படுத்தினான்.

சகலரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். எனினும், கனகத்தின் முகம் சோகத்தில் வாடியிருந்தது. சகோதரிகளிடம் அதனை அவளால் மறைக்க முடியவில்லை.

"உனக்கு என்னவாச்சு கனகம்..?"

"எனக்கொன்றும் ஆகலை." தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டவளாக அதற்கு மேல் எதையும் அவள் கூற விரும்பவில்லை. எனினும், சகலர் மீதும் அவள் வெறுப்புக் கொண்டவளாக இருந்தாள்.

"சிலவேளைகளில் குடும்பத்தவங்களை கண்டதால வீட்டு நினைப்பு வந்திருக்கலாம்..." மாமியார் சமாளித்தார்.

அதற்கு மேல் ஒருவரும் அது பற்றி எதனையும் தெரிவிக்கவில்லை.

திவாகரன் பிள்ளையுடன் மிக அன்பாக இருந்த பசுக்கள் இரண்டும் ஒரே வேளையில் நோய்வாய்ப்பட்டன. ஒன்று வேதனையுடன் கால்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதறியபடி சாய்ந்தது. மற்றையது இறந்துவிட்டது போல கால்களை நீட்டியவாறு மல்லாந்து கிடந்தது. திவாகரன் பிள்ளை படபடக்கலானான். பல தடவைகள் பசுக்களுக்கு மருந்து கொடுத்துப் பார்த்தான். மாமியார் தொழுவத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்தவராக கவலை தோய்ந்த முகத்துடன் இவ்வாறு கூறுவது காதில் விழுந்தது.

"இது யாரோட சாபமோ..."

கனகம் உள்ளூர மகிழ்ந்தாள். அவள் கடவுளை வேண்டிக் கொண்டாள்.

"அதிர்ஷ்ம் கெட்ட ஜென்மங்கள் எல்லாம் ஒழிந்து விட்டன..."

அவள் அவற்றை ஏறிட்டும் பார்க்கவில்லை. இரவில் திவாகரன் பிள்ளை மாட்டுத் தொழுவத்திற்கு அருகிலிருந்த ஓர் அறையில் படுத்துறங்கினான். இரவில் வருத்தம் அதிகரித்து விட்டால்...? வாய் பேச முடியாத அப்பாவி ஜீவன்களுக்கு யாருடைய துணை...?

அவள் கட்டில் மீது சாய்ந்தாள். கூரையில் தொங்கும் வைக்கோல் கற்றைகளை முறைத்துப் பார்த்தவளாக ஏதோ குசுகுசுக்கலானாள்.

"எல்லோரும் அதுகளோட ரொம்பப் பாசம்... என்னோட எள்ளளவும் பாசமில்லை என்றே தோணுது. அதுகளுக்கு காட்டும் பரிவு... அனுதாபம்... கவனிப்பு.. இந்த மனுஷனுக்குக் கழுத்தை நீட்டியது எனது தலைவிதி" அவள் வேதனையில் புறுபுறுத்தாள். அழுதாள். அலறினாள். மறுநாள் காலை வரை திவாகரன் அவளிடம் வரவில்லை. அவன் நோய்கண்ட பசுக்களைப் பராமரித்து, கஞ்சூட்டி, மருந்து ஊட்டியவனாக இருந்தான். ஒரு தடவை அவள் யன்னல் வழியே தொலைவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவன் இவ்வாறு உரத்துக் கூறினான்.

"கனகம்.... இப்போ காந்தினிக்கு குணம் ஆகி விட்டது... இப்போ நீர் அருந்துகிறது.."

கனகம் மறுபக்கம் முகத்தைத் திரும்பிக் கொண்டாள். அன்றிரவும் மாட்டுத் தொழுவத்திற்கு அருகிலிருந்த அந்த அறையிலேயே திவாகரன் படுத்து உறங்கினான். அவன் இராப் போசனத்திற்காக வந்தபோது "கனகம், உமக்குத் தனியாகத் தூங்கிறதுக்குப் பயமென்றால் சாந்தாவை வரச் சொல்லும் அறைக்கு.... எனக்கு அதுகளைப் போட்டுட்டு வர முடியாதே.... அதுகளுக்கு இரவில ஏதாச்சும் ஆயிட்டா என்ன பண்றது...? நான் அங்கு படுத்துத் தூங்கிறன்...." என்றவாறு அவளை விட்டு நீங்கினான்.

கனகத்திற்கு ஓவென்று அழ வேண்டும் போல் தோன்றியது. அவளால் அந்த வேதனையை சகித்துக் கொள்ள முடியவில்லை. "இந்த வாழ்க்கையின் அர்த்தம் என்ன? கட்டாக்காலியொன்றின்... மிருகமொன்றின் நிலைகூட அவளுக்குக் கிடைக்கவில்லை. இது போன்று வாழ்வதை விட மிருகமாகவே இருந்து விட்டால் மேல்.... அவளுக்கு அது போன்ற ஒரு வாழ்க்கை வேண்டப்படவில்லை. அவள் இந்த வீட்டில் காலடி எடுத்துவைத்து இப்போது இரண்டு வாரங்கள் கடந்து விட்டன. அவள் இன்னும் அப்படியே உள்ளாள். எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அவள் காலையில் அங்குமிங்கும் கையை பிராண்டியவாறு தனியாக முணுமுணுக்கலானாள். நன்கு விடிந்தும் கனகம் அறையை விட்டு வெளியே வரவில்லை. அவள் மற்றைய நாட்களில் கண்விழித்தெழும் நேரம் கடந்து விட்டது. மாமியார் இந்தத் தாமதத்தால் வெகுண்டெழுந்தார்.

"சாந்தா, போய்ப் பார்... சத்தத்தையே காணலையே..."

அறைக்குச் சென்ற வேலைக்காரி மறுகணமே ஓடோடி வந்தாள்.

"கனகம் அம்மா அறையில் இல்லை.."

மாமியார் ஒருகணம் திகைத்துப் போனார். குளியலறை, கழிப்பறை, அடுக்களை அறை... எங்குமே தேடிப்பார்த்தும் அவள் கிடைக்கவில்லை. பொழுது புலர்ந்தது. ஏழு... ஏழரை,. எட்டு.... எட்டரை... பத்துமணியும் ஆயிற்று. எல்லோரும் சல்லடை போட்டு கனகத்தைத் தேடினர். எவராலும் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவள் எங்கே? அவளுக்கு என்ன நேர்ந்தது? அவள் எங்கு சென்றாள்..?

எல்லோர் முகத்திலும் அமைதியின்மை குடிகொண்டிருந்தது. தோட்டமெங்கும் தேடி முடிந்தாயிற்று. தவறுதலாக கிணற்றிலோ குளத்திலோ விழுந்து விட்டாளோ...?"

"இல்லவேயில்லை.... அப்படி எதுவும் நடந்திருக்காது" திவாகரனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவன் அவளின் மூத்தவர்களுக்கு அறிவிக்க வேண்டுமா? எனினும், அவன் அவர்களிடம் எதனைக் கூறுவது? தனது அறையில் தன்னருகே படுத்துறங்கிய மனைவியைக் காணவில்லை என்று கூறினால்...? திவாகரனுக்கு வியர்த்தது.

அது மாலைவேளை.... நான்கு மணி தாண்டியிருந்தது. கனகம் பற்றி தகவல் கிடைத்ததாக இல்லை.... சகலரும் மாட்டுத் தொழுவத்தின் புழைக்கடையில் அமர்ந்துகொண்டு எதிர்பார்ப்பு சிதைவடைந்தவர்களாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்திருந்தனர்.

ஒரே தடவையில் சாந்தா உரத்துக் கத்தலானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆம்.... அதோ கனகம் அம்மா... தொழுவத்தின் உள்ளே....? அவள் தொழுவத்தின் உள்ளே கையை நீட்டி சுட்டிக் காட்டினாள்.

கனகம் பசுக்களுக்கு மத்தியில் இருந்தாள். கைகள் இரண்டையும் தரையில் பதித்தவளாக இரை மீட்டியவாறு ஒரு வாய்பேசா ஜீவனாகவே இருந்தாள். திவாகரன் அவளை அன்பொழுக அழைத்தான்.

"கனகம்..."

அவள் அன்புடன் உறுமியவாறு தலையை அங்குமிங்கும் ஆட்டினாள். அவனுக்கு கீழ்ப்படிந்தவாறு நாக்கை வெளியே நீட்டிக்கொண்டு அவனை நோக்கியவளாக இருந்தாள்.

"சாந்தா... கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா... அவளுக்குத் தாகம் போலிருக்கிறது...." கனகம் நன்றியுணர்வுடனும் எதிர்பார்ப்புடனும் திவாகரன் பிள்ளையை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் பிண்ணாக்கும் நீரும் கலந்து பிசைந்த பெரியதொரு பாத்திரத்தை அவள் எதிரே கொண்டுவந்து வைத்தான். பாத்திரத்தினுள் கையை விட்டு அதனை நன்கு கடைந்து அவளுக்கு அறுகே கொண்டு சென்றான். அவள் மிக்க மகிழ்ச்சியடைந்தாள். அவள் நாக்கை வெளியே நீட்டிக்கொண்டு, மீண்டும் பாத்திரத்தில் தலையை அமிழ்த்தி இளநாக்கடித்தவாறு நீர் அருந்தத் தொடங்கினாள்.


திவாகரன் பிள்ளையின் நெஞ்சு நிறைந்தது. அலைமோதும் பாசத்துடன் அவன் கனகத்தின் மேனியை வருடினான். கழுத்துப் பகுதியைத் தடவிக் கொடுத்தான். நெற்றியில் உச்சி மோந்தான். கனகத்தின் கண்களில் நீர் வழிந்தோடியது. தாரை தாரையாக கண்ணீர் சொரிந்தாள்.

சாந்தா, வேலைக்காரச் சிறுமி இந்தக் காட்சியினால் மௌனித்தவளாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.■

*(மலையாள மொழியில் படைக்கப்பட்ட இந்தச் சிறுகதைக்கு "பசு" என்று பெயரிடப்பட்டிருந்தது. மலையாள சிறுகதைகளின் ஆங்கிலத் தொகுப்பொன்றான Inner paces எனும் நூலில் இருந்து*

***சிங்களத்தில் மொழிபெயர்த்தவர் புஷ்பா ரம்லினி. சிங்களத்தில் இருந்து தமிழில் எம்.ரீ.ஸெய்னுர் றிஃபா***

# வரையறை தாண்டி வாழ்தல்



எனக்கும் உனக்கும்
குறைந்த பட்சமாய்
உடலியல் ரீதியில்
வேற்றுமை காண விளைகையில்
ஒரு சில தென்படும்
அதற்குமப்பால்
அடக்கு முறையர்.
சமையல் மற்றும் வீட்டு வேலைகள்
பொறுமை அடக்கம்
பண்பாடென்று அடையாளப்படுத்தும்
உடைகள் அத்துடன்
ஒடுங்கிப் போதல் என
கூடிய பட்சம்
வேற்றுமை காண விளைவார்கள்.
நானும் நீயும்
வாழுதல் பற்றிய
வரையறைகளை
அக்குவேறு ஆணிவேறு என
கூறி வைத்தனர் குடும்பம் என்பதாய்.
உன்னைப் பற்றி
என் புரிதல்கள் பற்றியும்
உணர்வுகள் பற்றியும்
எள்ளள வேனும் பேசப்படாமல்
கண்கண்ட தெய்வம்
புல்லாய் இருந்தும்
புருசனென்று எல்லாம்
புனைந்து வைத்தனர்.
இல்லத்தரசியாய்
கற்புக்கரசியாய்
குத்து விளக்கை ஏற்றுபவளாய்
கூறி வந்தனர்.
இப்படியெல்லாம்
கட்டமைத்த நம்
கரடு முரடருடன்
தெரிந்தும் தெரியாமலும்
வாழும் என்னிடம்
உன்னைப் பற்றிய
உள் உணர்வுகள்
பொறுமை என்றும்
அடக்கம் என்றும்
பண்பாடென்றும்
குடும்பம் என்றும்
குலையப்படாமல் இன்னமும் தெளிவாய்
சொல்லவும் முடியா
சோதியாய்
வானாய்
மொழிகள் கடந்த
மௌனமாய்
மழையாய்
கவிதையாய்
நானும் நீயும்
வாழ்ந்தும் மடிந்தும்
மடிவுக்குப் பின்னும்
யுகங்கள் கடந்தும்...

**சேரலாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வன்செயலற்ற நாளைய தினம்











நவம்பர் மாதம் 25 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் பெண்களுக்கு எதிரான வன்செயல்களை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச தினத்தை நினைவுகூர்வதற்காக பெண்கள், ஊடகக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த குறுநாடக விழாவும் இசை விருந்தும் 2006 நவம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று மருதானை எல்பின்ஸ்ரன் அரங்கில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

அங்கு பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளரும், FLICT நிறுவனத்தின் பணிப்பாளர்களுள் ஒருவருமான கலாநிதி விஜய ஜயதிலக அவர்கள் "பெண்களுக்கு எதிரான வன்செயல்கள்" தொடர்பான அர்த்தபுஷ்டியான சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார். புத்தளம் பிரஜா திரிய என்ற அமைப்பு, பெண்கள் நிலையத்துடன் இணைந்த கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் நாடகக் குழு, பிரசன்னஜித் அபேசூரியவின் கட்டுமர வீதி நாடகக் குழு, குருணாகல் பெண்கள் வள மத்திய நிலையத்தின் நாடகக் குழு ஆகியவற்றால் பெண்கள் எதிர்நோக்க நேரிட்டுள்ள பல்வேறு விதமான இம்சைகளையும் துன்பங்களையும் எடுத்தியம்பும் விதத்திலான குறு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

இந்த வைபவம், இளந் தலைமுறையினரை இலக்காகக் கொண்டதாக நடைபெற்றது. அதற்காக இளைஞர் பரம்பரையினரின் இதயத்தைக் கொள்ளைகொண்ட இசைக் குழுவாகிய பாத்தியா-சந்தூஷ் இசைக் குழுவினால் இசை விருந்தும் அளிக்கப்பட்டது.

அறிவு, மகிழ்ச்சி, வினோதம் என்பவற்றுடன் சுமார் 700 பேர் பங்குபற்றிய இந்த வைபவம் நிறைவெய்தியது. அந்த வைபவத்தின் பல்வேறு கட்டங்களையும் சித்தரிக்கும் நிழற்படங்களை இங்கு காணலாம்.













ரசிக்கா தீமானி
புகைப்படங்கள் : ஜயந்தி குருஉத்தும்பால





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org